உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-ருஉ.] துன்முகிஞு—ஆவணிமீ [பகுதி-கo.
Vol. 52. August-September—1956. No. 10.

உள்ளுறை


தமிழகம்: 289

மா. ரா. இளங்கோவன்

வேள்விக்குடிச் செப்பேடு: 298

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

கோற்கை: 307

டாக்டர். மா. இராசமாணிக்கனார்

தமிழ் இலக்கியம் கற்க வழிமுறை 315

அ. கி. பரந்தாமனார்

மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகள் அறிவிப்பு:


வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1956.

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
   தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனார், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
   தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
   தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
   வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
   செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
   அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
   தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ
கடவுள் துணை
# செந்தமிழ்

தொகுதி—ருஉ.] துன்முகி௵—ஆவணி௴ [பகுதி—கo.
Vol. 52. August-September—1956. No. 10.

# தமிழகம்

மா. ரா. இளங்கோவன் B. A. (Hons.)

## தமிழகத்தின் பொற்காலம்

தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன இன்றுள்ள பழந்தமிழ் நூல்களாகும். மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்து இவை போன்ற பல நூல்களை உலகிற்கு அளித்தது என்பது அறிஞர் கருத்தாகும். சங்க காலத்தில் இந்நூல்கள் தோன்றினமையின், இவை 'சங்க நூல்கள்' எனப்படுகின்றன. இற்றைக்குச் சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் இவை செய்யப்பட்டனவாதல் வேண்டும் என்று நாம் துணியலாம். சங்க காலம் எனப் போற்றப்படும் இப் பண்டைக் காலமே தமிழகத்தின் பொற்காலம் என்று சொல்லத் தகும் நிலையில் அமைந்தது.

## தமிழகம்

தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலே சங்க நூல்களுள் பழமையானது என்பது பலரது கொள்கை. அந் நூலின் காலம் கி. மு. 3-ஆம் நூற்றாண்டு என்று கூறலாம். அந் நூலில் தமிழகம் இன்னது என்பது பற்றிய தெளிவான விளக்கம் அமைந்துள்ளது.

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

தொல்காப்பியர் காலத்தில் தமிழகம் வடக்கே வேங்கட மலையையும் தெற்கே குமரியையும் எல்லைகளாகப் பெற்றிருந்தது என்பது இதன் பொருள். "குமரி என்பது ஆறு, அக் குமரியாறு இக் காலக் குமரி முனைக்கும் தெற்கே இருந்தது; அஃது இருந்த நாடு பிற்காலத்தில் கடல் கொண்டது", என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர். இன்று மலையாளம் பேசப்படும் நாடு பழைய காலத்தில் சேர நாடு எனப்பட்ட தமிழ் வழங்கிய பகுதியாக இருந்தது. மலையாளம் என்னும் தனி மொழியே கி. பி. 13-ஆம் நூற்றாண்டு வரை இல்லை எனலாம்.

தொல்காப்பியர்க்குப் பின்னர் வந்த சிலப்பதிகாரத்தில்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாடு"

என்று தமிழகத்தின் எல்லைகள் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தின் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு. அக் காலத்தில் தமிழகம், வடக்கே வேங்கட மலையையும் தெற்கே கன்னி முனையையும் கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் எல்லைகளாகப் பெற்றிருந்தது என்பது வெளிப்படை. இங்ஙனம் நாற்புறமும் திட்டமாக எல்லை கோலப்பட்ட நிலமே தமிழகம் என்பதை நாம் அறிய வேண்டும்.

## மூன்று பிரிவுகள்

தமிழகம் அருவாநாடு, சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடு, கொங்குநாடு என்னும் பிரிவுகளைப் பெற்றிருந்தது. ஆயினும் சேர நாடு, சோழநாடு, பாண்டியநாடு ஆகிய முப்பெரும் நாடுகளே தமிழ் நூல்களில் பெரிதும் பேசப்படுகின்றன. சேர, சோழ, பாண்டியர் முடியுடை மூவேந்தர் எனப்பட்டனர். கொங்குநாட்டையும் தொண்டைநாட்டையும் சிற்றரசர் பலர் ஆண்டு வந்தனர். பின்னர்க் கொங்குநாடு சேரர் ஆட்சிக்கும் தொண்டைநாடு சோழர் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தன.

## சேரநாடு

இன்று மலையாளமொழி பேசப்படும் நிலப்பரப்பே சேரநாடு எனப்பட்டது; சேரநாடு மலையாளமாவட்டம், கொச்சி, திருவாங்கூர்ச் சீமைகள் சேர்ந்த பகுதியாகும். மலைகளின் மிகுதியே மலையாளம் என்னும் பெயர்க்குக் காரணமாயிற்று. மேற்குத்தொடர்ச்சி மலைகட்

கும் அரபிக்கடலுக்கும் இடைப்பட்ட அந்நிலப்பகுதி கிழக்கில் மலைவளம் செறியப்பெற்றும், மேற்கில் கடல்வளம் நிறையப்பெற்றும் இருக்கிறது. மலைப்பகுதிகளில் காடுகள் மிகுதி; காடுகளில் தேக்கு, அகில், சந்தனமரங்கள் வானுறவோங்கி வளர்ந்தன; யானைகள் மிகுதியாக வாழ்ந்தன. மலைகளில் மிளகு மிகுதியாகப் பயிராயிற்று. தமிழகத்தின் பிறபகுதிகளில் இம்மலைபடு பொருள்கள் இல்லை. அராபியர், எகிப்தியர், உரோமர், அபிசீனியர் முதலிய மேலைநாட்டினர் சேரநாட்டுடன் கடல் வாணிகம் செய்யத் தொடங்கினர்; போர்க்கருவிகள், கண்ணாடிப்பாத்திரங்கள் முதலிய தங்கள் நாட்டுப்பொருள்களைச் சேரநாட்டில் குவித்தனர்; அதற்குப் பதிலாகத் தேக்கு, அகில், சந்தனக் கட்டைகளையும், மிளகையும், யானைத்தந்தங்களையும் பெற்றுச் சென்றனர். மேலைநாட்டார் சேரநாட்டாருடன்கொண்ட இக்கடல்வாணிக உறவினால் சேரர் செல்வவளத்துடன் வாழ்ந்தனர்.

## நகரங்கள்

சேரநாட்டில் புகழ்பெற்ற ஆறு பேரியாறு என்பது. அது கடலொடு கலக்கும் இடத்தில் முசிறி என்னும் துறைமுக நகரம் இருந்தது. அதனை அடுத்துச் சேரர் தலைநகரமாகிய வஞ்சிமாநகரம் விளங்கியது. தொண்டி, முசிறி, பக்கரை என்பன சேரநாட்டின் துறைமுக நகரங்கள். அயல்நாட்டுக் கப்பல்கள் அங்கு வந்தவண்ணமிருந்தன. வஞ்சிமாநகரில் அரசன் அரண்மனை நடுநாயகமாக அமைந்திருந்தது. அக்கால நகரமைப்புத் திட்டப்படி வஞ்சிமாநகரம் திறம்பட அமைப்புண்டிருந்தது. அங்குச் சைவ, வைணவ, சமண, பெளத்த சமயக் கோவில்கள் இருந்தன.

## சேரமன்னர்

சேரமன்னர் 'வானவர்' எனப்பட்டனர். அவர்கள் மலைப்பகுதியினராதலின் இப்பெயர் பெற்றனர். அவர்கள் அரசியல் முத்திரை 'வில்'; அடையாள மாலை பனம்பூ மாலை. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன் சங்ககாலச் சேரமன்னருள் சிறந்தவன். இமயவரம்பனின் இளவல் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பவன். இவர்களிருவரும் போர்க்கலையில் வல்லவர்கள். இவர்களை அடுத்துச் சிறந்து விளங்கியவன் சேரன்-செங்குட்டுவன். இவன் வாணிகக் கப்பல்களை வழிமறித்துக் கொள்ளையடித்து வந்த கடற்கொள்ளைக் கூட்டத்தி

னரை அழித்தான்; தன் வீரத்திறனால் சோழ-பாண்டியரினும் சிறந்தவனாக விளங்கினான்; தன் ஆட்சித்தொடக்கத்தில் இவன், தன் தாயின் உருவம் செதுக்கக் கல்லைக் கொணர இமயம் சென்றான்; தன்னை எதிர்த்த ஆரிய மன்னரை வென்று வாகை சூடினான்; கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனார் மூலம் அறிந்த பின்னர்க் கண்ணகியின் படிமம் சமைக்க வேண்டுமென விரும்பினான்; படிமத்துக்குரிய கல்லைக் கொணர இமயம் சென்றான்; அங்குத் தன்னை எதிர்த்த கனகவிசயர் என்னும் ஆரிய மன்னரை வென்றான்; அவர்கள் தலை மீது கல் வைத்துச் சுமக்கச் செய்தான். சேரன்-செங்குட்டுவன் போர்த்திறன் சிலப்பதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## சோழநாடு

சோழநாடு என்பது இன்றைய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும், தென் ஆர்க்காட்டின் ஒரு பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பாகும். சோழநாட்டை,

> "கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
> தான்நிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை"

எனப் புலவரால் ஏத்தெடுக்கப்பட்ட காவிரியாறு தன் கிளையாறுகளுடன் பாய்ந்து நல்ல வளமுடையதாகச் செய்துவிட்டது. காவிரியாறும் அதன் கிளையாறுகளும் கொண்டுவரும் கரிசல் மண் நல்ல விளைச்சலை அளித்தது. வளமுடைய அந்த நாட்டை ஆண்ட காரணத்தால் சோழர் வளவர் எனப் பெயர்பெற்றனர். சோழரைக் கிள்ளி என்ற பெயராலும் புலவர்கள் வழங்கியுள்ளனர். நிலத்தைக் கிள்ளி—கிளறி உழுது மருதநிலமாக்கிய சிறப்பினால் அவர்கள் 'கிள்ளி' எனப் பெயர் பெற்றனர் என்று நாம் கொள்ளலாம். வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளமுடைய காவிரியாற்றுப் பாய்ச்சலினால், யானை மறையத்தக்க அளவில் செஞ்சாலிப் பயிர்கள் தழைத்து வளர்ந்தன; அதனால் குடிமக்கள் உணவுப் பற்றாக்குறை இல்லாது வாழ்ந்தனர். மக்கள் பசிப்பிணியற்று மகிழ்வோடு வாழ்ந்தமையைக் கண்ட புலவர் பெருமக்கள் "சோழவள நாடு சோறுடைத்து" எனப்பாராட்டி மகிழ்ந்தனர். சோழநாடு நெல், கரும்பு, வாழை, பாக்கு முதலியவற்றுக்கும், நெசவு முதலிய கைத்தொழில்கட்கும் பெயர் பெற்றது.

## நகரங்கள்

சங்ககாலச் சோழநகரங்களுள் உறையூர், பூம்புகார், நாகப்பட்டினம், குடந்தை முதலியன குறிக்கத்தக்கன. சோழரது பழைய தலைநகர் உறையூர். அஃது இன்று திருச்சிராப்பள்ளியை அடுத்துச் சிற்றூராகக் காட்சியளிக்கின்றது. பூம்புகார் கரிகால் பெருவளத்தான் காலமுதல் தலைநகரமாகவும் துறைமுகப்பட்டினமாகவும் விளக்கமுற்றது. பூம்புகாரின் கடற்கரைப்பகுதியில் அயலநாட்டு வாணிகர் இருப்பிடங்களும் வாணிகக் கிடங்குகளும் சுங்கச்சாவடி முதலியனவும் சிறப்புற்று விளங்கின; உள்ளூர்ப் பகுதியில் அரசன் அரண்மனை நடுநாயகமாக விளங்கியது. அங்கு இசையரங்கு, நாடக அரங்கு முதலிய கலை அரங்குகள் இருந்தன; உவவனம் முதலிய பலவகைச் சோலைகள் இருந்தன; பிறவாயாக்கைப் பெரியோன் முதலாப் பதிவாழ் சதுக்கப்பூதம் ஈறாக இருந்த தெய்வங்கட்குஉரிய கோவில்களும் இருந்தன. இந்நகர அமைப்புச் சிறப்பினைச் சிலப்பதிகாரத்தில் நன்றாகக்காணலாம்.

## சோழ அரசர்

சங்ககாலச் சோழமன்னரிற் புகழ்பெற்றவன் கரிகாலன். இவன் நீதி வழங்குதலிற் சிறந்தவன் எனப் புகழ் பெற்றான்; இலங்கையின் வடபகுதியைத் தன் கடற்படையைக்கொண்டு வென்றான்; அங்கிருந்து சிறைப்பிடித்துக்கொண்டுவந்த இலங்கைப் போர்வீரரைக் கொண்டு காவிரிக்குக் கரையமைப்பித்தான். கரிகாலனைப் பாராட்டிப் புலவர் பலர் பாடியுள்ளனர். முடத்தாமக்கண்ணியார் என்ற புலவர் கரிகாலனின் சிறப்பினை 248 வரிகளைக்கொண்ட ஆசிரியப்பாவினுல் புகழ்ந்து பாடியுள்ளார். அப்பாவின் பெயர் "பொருநராற்றுப்படை" என்பது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பவர் 301 வரிகளைக் கொண்ட பாவினுல் அவன் சிறப்பியல்புகளையும் பூம்புகாரையும் சிறப்பித்துள்ளார். அப்பாவிற்குப் "பட்டினப்பாலை" என்பது பெயர். இப்புலவர்க்குக் கரிகாலன் பதினாறுயிரம்பொன் பரிசளித்தான் என்று கலிங்கத்துப்பரணி முதலிய பிற்காலத்து நூல்கள் கூறுகின்றன.

சோழர்களாட்சியில் கடல் வாணிகம் மிகச் சிறந்த நிலையில் இருந்ததென்பதைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். கரிகாலன்

காலமுதல் சோழர்கள் தொண்டைநாட்டையும் பிடித்து ஆளலாயினர் என்பது தெரிகிறது. சோழ இளவரசன் காஞ்சியில் பிரதிநிதியாக இருந்து தொண்டைநாட்டை ஆண்டுவந்தான் என்ற விவரத்தை மணிமேகலையினால் அறிகின்றோம். சோழ அரசர்கள் தமிழில் வல்ல புலவர்-பாணர்-கூத்தர் விறலியர் என்பவரை நன்கு பேணினர். சோழ அரசருள் பலர் கவி பாடும் ஆற்றல் பெற்றவர். கரிகாற் பெருவளத்தானின் மகளான ஆதிமந்தி பாடியதாகச் சில பாடல்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## பாண்டி நாடு

இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களும் கீழ்க்கடற்கரை வெளியும் சேர்ந்ததே பாண்டியநாடெனப்படும். பாண்டியநாட்டில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானில வளங்களும் உள்ளன. "வையை என்னும் பொய்யாக் குலக்கொடி" என்று புலவர்களால் பாராட்டப்பட்ட வையையாறும் பொருநை எனப்படும் தாமிரவருணியும் இந்நாட்டில் பாய்கின்றன. இவ்விரு ஆறுகளும் பாயப்பெறும் இடங்கள் நல்ல மருதநிலக்காட்சியை அளிப்பன. இங்குப் பருத்தி செசவு மிகுதியாக நடைபெற்று வந்தது. கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டிலிருந்து மெல்லிய ஆடைகள் மௌரியர் தலைநகரான பாடலிபுரத்திற்கு அனுப்பப்பட்டதாகச் சாணக்கியர் கூறியுள்ளார். கொற்கை என்னும் கடற்கரைப் பகுதியில் முத்தெடுத்தல் சிறந்த தொழிலாக இருந்தது. பாண்டி நாட்டு முத்துக்கள் சீனம் முதலிய கிழக்குநாடுகட்கும் இத்தாலி முதலிய மேலைநாடுகட்கும் மிதியாக ஏற்றுமதி செய்யப்பட்டன. அதனால் புலவர் பெருமக்கள், "பாண்டிய நாடு முத்துடைத்து" என்று பாராட்டலாயினர்.

## நகரங்கள்

பாண்டிய நாட்டுத் தலைநகரம் மதுரை. கொற்கை, தொண்டி முதலியன துறைமுகப் பட்டினங்கள். சேர சோழ நாட்டுத் தலைநகரங்களைப் போலவே பாண்டிய நாட்டுத் தலைநகரமும் பல சமயக் கோயில்களைப் பெற்றிருந்தது. அரசன் அரண்மனை ஊரின் நடுநாயகமாக விளங்கியது; அதனை அடுத்த நிலையில் தமிழ்ச் சங்க மாளிகை சிறந்திருந்தது. கொற்கை சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கிற்று.

அதனால், அங்கு அயல் நாட்டு வாணிகர் இருப்பிடங்களும் தொழிலாளர் மனைகளும், சுங்கச் சாவடியும் கிடங்குகளும் குறைவற்று இருந்தன.

## பாண்டி மன்னர்

பாண்டியருள் சிறந்த மன்னர் இருவர் ஒரே பெயரினை உடையவராயுள்ளனர். அவருள் ஒருவன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்பவன். இவன் சிறந்த புலவன்; இவன் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. இவன் இளைஞனாக இருந்த பொழுதே தலையாலங்கானம் என்னும் இடத்துப் போரில் சேர சோழரையும், ஐம்பெரு வேளிரையும் ஒரு களத்தில் எதிர்த்துத் துரத்திச் சென்று முற்றிலும் முறியடித்து வாகை சூடினான். அதனாலேயே இவன் "தலையாலங்கானத்துச் செருவென்ற" என்னும் அடைமொழியைப் பெயர்க்கு முன்னால் பெற்றான். இவன் அவைப் புலவர் மாங்குடி மருதனார் என்பவர். அப்புலவர் நெடுஞ்செழியனது சிறப்புக் களையும் மதுரைமா நகரின சிறப்பினையும் மிகத் தெளிவாக 782 வரிகளைக் கொண்ட பாடலில் குறித்துள்ளார். அப்பாடல் மதுரைக் காஞ்சி என்னும் பெயருடையது.

மற்றொருவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பவன். இவன் செங்குட்டுவனைப் போல இமயம் வரைச் சென்றவன்; அங்கு எதிர்த்த ஆரிய மன்னரை வென்றமையால் 'ஆரியப்படை கடந்த' என்னும் அடைமொழியைப் பெற்றவன். நடுவுநிலை தவறாத பண்புடைய இவன் கல்வியின் சிறப்பினை நன்கு உணர்ந்து பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் இருக்கின்றது.

## தொண்டை நாடு

பாலாற்றுக்கும் வடபெண்ணையாற்றுக்கும் இடைப்பட்ட பெரிய நிலப்பரப்பே தொண்டை நாடாகும். இக்காலத் தென் ஆர்க்காடு, சித்தூர், செங்கற்பட்டு மாவட்டம், நெல்லூர் மாவட்டத்தின் தென் பகுதி என்பன தொண்டை நாட்டு எல்லைக்குள் அடங்குவனவாம். ஜவ்வாது மலைத்தொடர், திருப்பதி மலைத்தொடர், வேறு மலைத் தொடர்களும், பல குன்றுகளும் இப்பகுதியில் நிரம்பியுள்ளன. இன்றுள்ள ஆலங்காடு, ஆர்க்காடு, வேர்க்காடு, ஈர்க்காடு முதலிய பெயர்களைக் கொண்டு சங்க காலத்தில் இங்குப் பெருங் காடுகளே மிக்கிருந்தன என்று கொள்ள இடமுள்ளது. கரிகாலன் தொண்டை நாட்டை

வென்ற பிறகு, 'காடு கெடுத்து நாட்டாக்கினன்' எனவரும் கூற்று இதனை மெய்ப்பிக்க வல்லது. பாலாறு, குசத்தலை, பொன்முகலி, பழவாறு, பெண்ணை என்னும் ஆறுகள் பாய்ந்து இந் நாட்டை ஓரளவு செழிப்பாக்கி வந்தன.

## நகரங்கள்

தொண்டை நாடு, சங்க காலத்தில் அருவா நாடு, அருவா வடதலை நாடு என இரு பெரும் பிரிவுகளாக இருந்தது. அருவா நாடு என்பது காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தென் தொண்டை நாடு. அருவா வடதலை நாடு என்பது கூடூர்த் தாலூகாவில் உள்ள பவத்திரியைத் தலைநகராகக்கொண்ட வட தொண்டை நாடு. பவத்திரி என்பது இன்று ரெட்டி பாளையம் என்னும் பெயரால் வழங்குகின்றது.

## அரசர்கள்

சங்க காலத்தில் அருவர் வடதலை நாட்டில் தொண்டமான் திரையன் என்பவன் ஆண்டு வந்தான். காஞ்சியில் தொண்டமான் இளந்திரையன் என்பவன் ஆண்டு வந்தான். இளந்திரையனை உருத்திரங்கண்ணனர் என்ற புலவர் 500 அடிகளைக் கொண்ட ஓர் பாவினல் (பெரும்பாண் ஆற்றுப்படை) பாடியுள்ளார். அப் பாவால் அருவா நாட்டைப்பற்றியும் இளந்திரையனைப்பற்றியும் பலசெய்திகளை அறிய முடிகிறது. தொண்டைமான் என்பான் ஔவையார் காலத்தில் காஞ்சியில அரசனக இருந்தான் என்பது புறப்பாடல் ஒன்றால் தெரிகிறது. தொண்டை நாட்டு அரசர்கள் தொண்டைமான்கள் எனப்பட்டனர்; மக்கள் 'தொண்டையர்' எனப்பட்டனர்; அருவா நாட்டினர் ஆதலின் 'அருவாளர்' எனவும் சிறப்புப் பெயர் பெற்றனர்.

## சங்ககாலப் புலவர்கள்

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு முதலிய எல்லா நாடுகளிலும் சங்ககாலத்தில் புலவர்கள் இருந்தனர். இவர்கள் பரிசில் பெறும்பொருட்டுப் பேரரசர், சிற்றரசர், செல்வர் ஆகியோரைப் பழுமரத்தை நாடிச்செல்லும் பறவைகளைப்போல நாடிச் சென்றனர்; அவர்களைத் தாம் வல்லவாறு பாடிப் பரிசில் பெற்றனர். அரசரும் வள்ளலகளும் புலவர்களைப்போற்றி, அவர்கள் உள்ளம் மகிழும் வரையில் பொருளுதவித் துணை புரிந்தனர். இசைத் தமிழில் வல்ல பாணரும், நாடகத் தமிழில் வல்ல கூத்தரும் தமிழ்ப்பெருமக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டனர்.

புலவர்கள் அரசர்களையும் வள்ளல்களையும் நாடிச்சென்று பரிசில் பெற்றபோதிலும், அவர்கட்கு உறுதிப் பொருள்களை உரைப்பதில் அஞ்சிலர்; நன்றாய் இடித்துக்கூறினர். புலவர்களே நிகழவிருந்த பலபோர்களைத் தடுத்து நாட்டில் அமைதியை நிலவச்செய்தனர். கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் மக்களுக்கும் நடைபெற இருந்த போரை இருதிறத்தார்க்கும் தக்கவாறு அறிவுரை கூறித் தடுத்தவர் புலவர் பெருமக்களே ஆவர். நீரின்றி நிலங்கள் வாண்டமையின் நீர் நிலைகளை உண்டாக்கவேண்டும் என்ற அறிவுரையை மன்னனொருவனுக்கு அளித்தவர் புலவர் வெள்ளைக்குடிநாகனார் என்பவர். ஒவ்வோர் பேராசனிடமும் சிற்றரசனிடமும் அவைப்புலவர் என்று ஒருவர் சிறப்பாக இருந்து வந்தார். அவர் அரசனுடைய பிள்ளைகட்குத் தமிழ்க் கல்வி கற்பித்து வந்தனர்; அவனுடைய இன்ப துன்பங்களிற் பங்கு கொண்டனர். அப்புலவர் பெருமக்கள் அரசனைப்பற்றியும் வள்ளல்களைப்பற்றியும் அவ்வப்போது பாடிய பாக்களே நமக்கு அவர்களைப்பற்றி அறியப் பெருந்துணையாயுள்ளன. வேள்-ஆய் என்ற வள்ளலுடன் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் உறைந்தார்; வேள் பாரியுடன் கபிலர் உறைந்தார்; அதியமானுடன் ஔவையார் வாழ்ந்தார்; கோப்பெருஞ்சோழனுடன் பொத்தியார் இருந்தார். இன்னனம் ஒவ்வொருவரிடமும் புலவர் பெருமக்கள் அவர்க்கு உற்றவராக இருந்து, நல்லுரை கூறும் அறிஞர்களாக விளங்கினர்.

ஆடவரைப் போலவே கவிபாடும் ஆற்றலுடைய பெண்மணிகளும் அக்காலத்தில் இருந்தனர். அவர்களும் ஆண்பாற் புலவர்களைப் போலவே வள்ளல்களைத் தேடிச்சென்றனர்; அவர்களைப்பற்றிக் கவிகள் பாடினர்; அவர்களால் நன்கு மதிக்கப்பட்டனர். காக்கை பாடினியார், ஆதிமந்தியார், ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார் என்பவர்கள் சங்க காலப் பெண்பாற் புலவரில் சிலராவர்.

# வேள்விக்குடிச் செப்பேடு

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

சங்க இலக்கிய காலத்துக்குப்பின் பாண்டிநாட்டில் களப்பிரர் என்றொரு கூட்டத்தார் வடநாட்டிலிருந்து கங்க நாடு கொங்கு நாடுகளின் வழியாகப் பாண்டிநாட்டுட் புகுந்து பாண்டி நாட்டின் தமிழ்ப் பண்பாட்டைச் சீர்குலைத்தனர். பண்டு தொட்டே சிவநெறியில் சிறந்து நின்ற பாண்டிவேந்தர் குடிமரபில் வேற்று நெறிகள் புகுந்தன; தமிழ் நூல்கள் பல அழிந்தன; தமிழியலும், தமிழ் இசையும் தமிழ் நாடகமும் தலை தடுமாறின; தமிழ் வல்ல சான்றோர் மறைந்தனர்; களப்பிரர் தமிழரல்லர்; அவர்காலத்தில்தான் வடமொழி மிக்க செல்வாக்குப் பெற்றது. தமிழ் இசை நாடக நூல்கள் பல வடமொழியிலும் பிறவற்றிலும் பெயர்ந்து மாறின. அவரது சமயம் சைவவைணவமல்லவாதலால் சமயத் தமிழ் நூல்களும் தலைதடுமாறிக் கெட்டொழிந்தன. இந்நிலைமைக் கூறவந்த பாண்டியர் வரலாறு என்னும் நூலுடையார், "இக்களப்பிரரது படையெழுச்சியினால் மதுரைமாநகரில் தமிழாராய்ச்சி செய்துகொண்டிருந்த கடைச்சங்கமும் அழிந்துபோய்விட்டமை அறியத் தக்கது. களப்பிரர் ஆட்சியால் ஏற்பட்ட தீமைகளுள் இதனினும் கொடியது வேறில்லையென்று கூறலாம்; எனவே, இவர்களது ஆட்சிக் காலம் ஓர் இருண்ட காலமாகும்," (பக். 37) என்று மனங் கரைந்து கூறுவது அறிஞர்கள் அறியவேண்டியதொன்று.

செந்தமிழ்ப் பாண்டி வானத்தின் புதிது பரவிய களப்பிர இருளைக் கிழித்துக்கொண்டு பலர்புகழ் தமிழ்ஞாயிறு தோன்றுங் காலத்தைத் தமிழகம் எதிர்நோக்கித் தவங்கிடந்தது. கி. பி. நான்காம் நூற்றாண்டில், பண்டைத் தமிழகத்தில் இருள் கடிந்து எழுதரும் ஞாயிறு போலப் பாண்டி வேந்தர் சிலர் தோன்றிப் பாண்டியரது பண்டைப் புகழை நிலைநாட்டுவாராயினர். இறைவன் விழி மூன்றினுள் பாண்டியர் நெற்றி விழி போலும் மேன்மையுடையரென்ற கருத்துப் பட, "கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப் பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல, வேந்து மேம்பட்ட பூந்தார் மாற," (புறம், 55) என்று சங்ககாலச் சான்றோர் கூறுவது காணலாம்.

களப்பிரர்க்குப் பின்பு தோன்றிய பாண்டி வேந்தருள் கடுங்கோன் என்பவன் தலைசிறந்தவனாவன். மதுரையிலிருந்து முதற்சங்கத்தைப் புரந்த பாண்டி வேந்தருள் கடுங்கோன் என்பான் ஒருவன் உண்டு. அவன் கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டு முன்பிருந்தவன். இக் கடுங்கோன் கிறித்து பிறந்தபின் நான்கு நூற்றாண்டு கழித்துத் தோன்றியவன். சிலர் இருவரையும் ஒருவனாகக் கொண்டு தடுமாறுவர்; உண்மையறிவாராய்ச்சி யுடையோர் அவர்கூற்றைக் கொள்ளமாட்டார்கள்.

களப்பிராது கலியிருள் கடிந்த கடுங்கோன் மிக்க சிறப்புடையவன்; அவனை வேள்விக்குடிச் செப்பேடுகள்,

“களப்பிர னென்னும் கலியரசன்
கைக்கொண் டதனை இறக்கியபின்
படுகடல் முளைத்த பருதிபோல்
பாண்டி யாதிராசன் வெளிப்பட்டு
விடுகதிர் அவிரொளி விலக வீற்றிருந்து
வேலை சூழ்ந்த வியலிடத்துக்
கோவும் குறும்பும் பாவுடன் முருக்கிச்
செங்கோ லோச்சி வெண்குடை நீழல்
தங்கொளி நிறைந்த தாரணி மங்கையைப்
பிறர்பா லுரிமை திறவிதி னீக்கித்
தன்பா லுரிமை நன்கனம் அமைத்த
மானம் போர்த்த தானை வேந்தன்
ஒடுங்கா மன்னர் ஒளிநக ரழித்த
கடுங்கோன் என்னும் கதிர்வேல் தென்னன்”

என்று சிறப்பித்துக் கூறுகின்றன. தென்பாண்டி நாட்டின் தென்பகுதி கடுங்கோநாடு என, இடைக்காலக் கல்வெட்டுக்கள் குறிக்கும் கடுங்கோ பின்னவன் எனக் கோடல் வேண்டும்.

இக்கடுங்கோவின் வழிவந்த வேந்தருள் அரிகேசரி பராங்குசவன்மன் என்பவன் ஒருவனாகும். அவன் அக்காலத்தே கங்கநாட்டை யாண்ட வேந்தன் மகள் பூசுந்தரி என்பவளை மணந்து கொண்டான். அவனுக்கு அவள் வயிற்றிற் பிறந்தவன் பராந்தகன். இவனுக்கு நெடுஞ் சடையன் பராந்தகன் என்றும் பெயர் வழங்குவதுண்டு. சடையைச் சடிலமென வடமொழிப்படுத்துச் சடில பராந்தகன் என்று இந்நாளையோர் வழங்குவர். இவன் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மதுரையில் இருந்து ஆட்சிசெய்தான்.

இப்பராந்தகனுக்கு முன்னும் பின்னும் வந்த பாண்டி வேந்தர் பலரும் சைவராக இருப்ப, இவன் மட்டும் திருமால்பால் பேரன்பு பூண்டொழுகினான். அந்நாளில் சீவில்லிபுத்தூரில் வாழ்ந்த வைணவச் சான்றோரான பெரியாழ்வார் இப் பாண்டியனுக்கு ஞானாசிரியராக விளங்கினார். சீவரமங்கலத்துச் செப்பேடுகள் இவனை, "பரம வைஷ்ணவன்" என்று பாராட்டுகின்றன. பெரியாழ்வாரும் திருமாலிருஞ்சோலைப் பதிகத்தில் இப் பாண்டியனைப் பாராட்டிச் சிறப்பித்திருக்கின்றார்.

இவ்வாறு "பரம வைஷ்ணவ"னாக இவ் வேந்தன் விளங்கிய போதும் இவன் சைவசமயத்தின்பால் காழ்ப்பின்றி ஒத்த மதிப்பளித்தொழுகினான். கோயம்புத்தூருக் கண்மையிலுள்ள பேரூருக்குக் காஞ்சிவாய்ப் பேரூர் என்றும் பெயருண்டு. அங்கே சிவபெருமானுக்குக் 'குன்றமன்னதோர்' கோயில் கட்டினான். திருச்சிராப்பள்ளி அம்பாசமுத்திரம் திருச்செந்தூர் முதலிய இடங்களிற் காணப்படும் இவனுடைய கல்வெட்டுக்கள் இவன் அவ்விடங்களில் சிவபெருமான் திருக்கோயில்கட்கு நிலங்களும் பிற நிவந்தங்களும் விட்டிருப்பதை எடுத்தோதுகின்றன.

ஏனாதி சாத்தஞ் சாத்தனார் என்பவர் இப்பாண்டியற்குத் தானைத் தலைவருள் ஒருவர். அவர் சிறந்த புலமையும் உடையவர். இந்நாளைத் தமிழ்நாட்டு அரசியற் சுற்றத்தாரை நோக்குவோர்க்கு இது புதுமையாகத் தோன்றும். இன்றைய தமிழ்நாட்டரசியல் தமிழைக் கொள்ளாது வேற்று மொழிகளை அரசியல் மொழியாகக் கொண்டுளது. இதனால் தமிழ் தெரியாதவர்கள் தமிழ் மக்களது அறிவுநெறியமைச்சராக வர இயலுகிறது; தமது பெயரைத் தமிழில் பிழையற எழுதும் பயிற்சியில்லாதவர்களும் அரசியற் பெருந்தலைவராய் விளங்க இடந்தருகிறது; தமிழ்ப் பயிற்சி மிகவுடையவர்களைத் தாழ்ந்த வாய்ப்புடையவராகவும் இந்நிலை உண்டுபண்ணியிருக்கிறது. ஏன்? தமிழ்நாடு என்று தொன்றுதொட்டுவந்த பெயர் வரலாற்றையும் அறியும் திறமின்றி மடராசு (மதராசு) நாடு என்று கூறலாமேயன்றித் தமிழ்நாடு என்று கூறுதற்கு வேண்டிய தெளிவும் இல்லாதிருக்கிறது எனின் வேறு கூறுவானேன்? முன்னைத் தமிழ் நாட்டரசியல் தமிழிலேயே நடந்தமையின் மிக்க தமிழ்ப்பயிற்சி யுடையோர் அமைச்சராகவும் அரசர்களாகவும் இருந்து தமிழ்நாட்டைச் சிறப்பித்தனர். திருவாத

லூர் பாண்டிவேந்தர்க்கு அமைச்சராயிருந்தவர்; சேக்கிழார் சோழ வேந்தர்க்கு அமைச்சக் கடம்பூண்டிருந்தவர். வேந்தர்கள் புலமை மிகவுடையாராயிருந்த செய்தியைச் சங்க இலக்கியங்களும் பிற்கால நைடதம் முதலிய நூல்களும் தெரிவிக்கின்றன. ஆகவே நெடுஞ் சடையன் ஆட்சியில் தானைத் தலைவருள் ஒருவராயிருந்த எனாதி சாத்தஞ் சாத்தனார் நல்ல தமிழ்ப்புலமையும் பாவன்மையும் பெற் றிருந்தாரென்பதில் வியப்பில்லை.

எனாதி சாத்தஞ் சாத்தனார், பாண்டியன் நெடுஞ்சடையன் ஆட்சி நலத்தைக் கூறவேண்டிய விடத்து,

"அறைகடல் வளாகம் பொதுமொழி யகற்றிச்
சிலையும் புலியும் கயலும் சென்று
நிலையமை நெடுவரை யிடவயிற் கிடாய்
மண்ணினி தாண்ட தண்ணளிச் செங்கோல்
தென்னவன்.........
கொன்றவென்றி நெடுஞ்சுடர்வேல்
கொங்கர் கோமான் கோச்சடையன்

என்றும், இவனுடைய தனிப் பண்புகளை,

"ஸ்ரீவரன் ஸ்ரீமனோகரன் சினச்சோழியன் புனப் பூழியன்,
வீதகன்மஷன் விநயவிச்ருதன் விக்கிரமபாரகன் வீரபுரோகன்
மருத்பலன் மான்யசாசனன் மனுபமன் மர்த்தித வீரன்
கிரிஸ்திரன் கீதிகிந்நரன் கிருபாலயன் கிருதாபதானன்
கலிப்பகை கண்டக நிஷ்டூரன் கார்ய தக்ஷணன்
பராந்தகன் பண்டிதவத்சலன் பரிபூரணன் பாபபீரு
குரையுறு கடற்படைத்தானைக் குணக்கிராகியன் கூடநிர்ணயன்"

என்றும் வரைந்திருக்கின்றார்.

இப்பாண்டியன் ஆட்சியில் பாண்டிநாடு இப்போது மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி யென்ற மாவட்டங்களாகவும் அவை யே பின்பு வட்டங்களாகவும் பிரிந்திருப்பது போல, அரசியல் ஆட்சி இனிது நடத்தற்கேற்ப இரணிய முட்டநாடு புறப்பறளைநாடு என்பன

முதல் தடக்குளநாடு கோட்டூர்நாடு என்பன ஈறுகப் பல நாடுகளாகப் பிரிந்திருந்தது. அவற்றுள் பாகனூர்க் கூற்றம் என்பது ஒன்று. இப்போது அது சோழவந்தான் தேனூர்ப் பகுதியாக இருக்கிறது. அது மிக்க நீர்வளமும் நிலவளமும் சிறந்தது; வையையாறு பாயும் வளம் படைத்தது. இன்றைக்கும் அப்பகுதி பசுங் கம்பலம் விரித்தது போலப் பச்சென்று பயிர்செறிந்து இனிய காட்சி வழங்குகிறது. அப்பகுதியில் வேள்விக்குடி யென்பது ஓர் ஊர். அங்கே வேதியர் குடிகள் நிரம்ப இருக்கும் என்பதை நேரிற் சென்று காணுமலே அறிந்துகொள்ளுமாறு அவ்வூர்ப்பெயரே காட்டிவிடுகிறது. இவ்வூர்தான் பிற்காலத்தே சோழவந்தான் என்று மாறி மருவிவிட்டதோ என நினைத்தற்கு இடம் தருகிறது. இஃது நன்கு ஆராயவேண்டிய தொன்று.

அவ்வூரில் காமக்காணி நற்சிங்கன் என்றொரு வேதியன் வாழ்ந்தான். காமக்காணி என்பது அவன் குடியிற் பிறந்தார்க்கு வழிவழியாக வரும் சிறப்புப் பெயராகும். இதன்மேல் கொற்கை கிழான் என்றொரு பட்டமும் இவன் குடிப்பிறந்தாருக்கு உண்டு. ஒருநாள் நற்சிங்கன் தன் குடிக்கு வழங்கி வரும் கொற்கை கிழான் காமக்காணி என்ற சிறப்புக்கள் உண்டானதற்குக் காரணம் அறியவேண்டுமென விரும்பித் தன் மனையிலுள்ள பழஞ்சுவடிகளை ஆராய்ந்தான். கொற்கை கிழான் என்பதும் காமக்காணி என்பதும் பண்டை நாளில் அரசர்கள் தந்தசிறப்பு என்றும், வேந்தர்க்கு வேள்வி முடித்துத் தந்தது பற்றிக் காமக்காணி யென்ற சிறப்பு உண்டாயிற்றென்றும் தொடக்கத்தில் தன் முன்னோர் கொற்கைப் பகுதியிற் குடியேறினர் என்றும், நாட்டு மக்களின் நலங் குறித்துச் செய்த நற்பணி கண்டு வியந்த பண்டை வேந்தர் தன் முன்னோர்க்குக் கொற்கை கிழான் என்ற சிறப்பை நல்கினரென்றும் அறிந்தான். இவ்வாறு ஒவ்வொன்றுய்ப் பார்த்து வருகையில் வேள்விக்குடி யென்ற ஊர் தனக்கு உரியதென்றும், இடைக்காலத்தே களப்பிரர்களால் அவ்வுரிமை இழக்கப்பட்டதென்றும் கண்டான். 'பண்டொரு புடையில் வைத்த பழம்பொருள் கிடைத்தவர் போல்' பெருமகிழ்வு கொண்டான். அவ்வூரில் வாழ்ந்த முதியவரைக் கண்டு அவர்களோடு அளவளாவி உண்மையை உறுதிசெய்து கொண்டான்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா? உதவாதே; இதற்கு என்செய்வது என்று பலபட எண்ணினன். வேறு சில வேதியர்களைக் கலந்து செய்யவேண்டிய செயல் வகைகளை ஆராய்ந்தான். இறுதியாக, வேந்தன்பால் இச் செய்தியை முறையிடுவதெனத் துணிந்தான்.

பின்பொரு நாள், நற்சிங்கன் கூடல்நகர்க்குச் சென்று வேந்தன் கோயில் வாயிலில் நின்று முறையிட்டான். காவலர் சென்று வேந்தனுக்குத் தெரிவித்து நற்சிங்கனையும் மன்னன் திருமுன் கொண்டு சென்று நிறுத்தினர். நெடுஞ்சடையன் நற்சிங்கனை நோக்கி 'என்னே நின் குறை?' எனப் பணித்தான்.

"வேந்தே, நின் முன்னோருள் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி யென்றொரு பாண்டி வேந்தனார் ஆட்சிசெய்தார். அவர் வெற்றி மிகுதியும் வேள்வி மிகுதியும் உடையர்; அவர் தலைவனை எதிர்த்த மறவரை வென்று கழுதையேர் பூட்டிப் பாழ்செய்த பகைவர் எயில்கள் பல; விளை புலங்களில் தேரைச் செலுத்தி யழித்த பகைவர் நாடுகளும் பல; பகைப் புலத்தில் களிறுகளைப் பரப்பிப் பாழ்செய்த நீருண் கயங்கள் பல; வெற்றி வேட்கையால் விழுங்கப்பட்டுப் போர் குறித்து வந்து அவர்க்குத் தோற்றுப் பழிபூண்ட பகை வேந்தரும் பலர்.

"நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பல."

அதனால் நெட்டிமையார் முதலிய சான்றோர் கள வேள்வியும் நான்மறை வேள்வியும் பெருக நடத்துவதுகண்டு "யா பல கொல்லோ பெரும" என்று அவரைப் பாராட்டி யுள்ளனர். வெல்போர் வேந்தர்களில் செருக்கள வேள்வி செய்வோர் பலராயினும், முதுகுடுமிப் பெருவழுதி போல மறைவேள்வி பலசெய்தோர் இலராதலால் அவரைப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யெனச் சான்றோர் சிறப்பித்து வழங்கினர். அவ்வேந்தர் பெருமானார் பாகனூர்க் கூற்றத்தில்

வேள்விக்குடி யென்னும் ஊர் இருக்குமிடத்தே பெரிய வேள்வியொன் றைச் செய்தார். அக் காலே எம் முன்னோருள் கொற்கை கிழான் நற் கொற்றன் என்பார் அவ் வேள்வியை முடித்துத் தந்தார்; அதனால் பெருமகிழ்வு கொண்ட வேந்தர் பெருமான் வேள்விநிகழ்ந்த விடத்தை வேள்விக்குடி யென்று பெயரிட்டு வழங்கியருளினர். அன்று முதல் அவ்வூர் எமகள் முன்னோர்க் குரியதாகவே இருந்து வந்தது," என்றான்.

இதனை,

"கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்துப்
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி யென்னும் பாண்டியாதி ராஜன்
நாகமாமலர்ச் சோலை* நளிர்சினை மிசைவண்டலம்பும்
பாகனூர்க் கூற்றமென்னும் பழனக் கிடக்கை நீர்நாட்டுச்
சொற்கணாளர் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத
கொற்கை கிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக்
கேள்வி யந்தணாளர் முன்பு கேட்க என்றெடுத்துரைத்து
வேள்விச்சாலை முன்புநின்று வேள்விக்குடியென்ற பதியைச்
சீரோடு திருவளரச் செய்தார், வேந்தன் அப்பொழுதே
நீரோடட்டிக் கொடுத்தான்,"

என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

இவ்வாறு நற்சிங்கன் கூறக்கேட்ட நெடுஞ்சடையன் அவனை நோக்கி, 'பின்பு அது என்னாயிற்று?' என்று வினவினான்.

"வேந்தே, நற் கொற்றனார் பெற்ற வேள்விக்குடி அவர்க் குரியதாகவே நெடுங்காலம் இருந்து வந்தது. பின்னர் களப்பிரர் என்னும் கொடுங்கோன் மன்னர் புகுந்து பாண்டிநாட்டை அலைத் தனர்; பாண்டி மன்னர்களையும் நாட்டினின்றும் ஓடுமாறு துரத்தினர்; நாட்டைத் தாம் கைக்கொண்டு நாட்டு மக்கட்குப் பேரின்னலை விளைத்த னர். பேரூர்களையும் சிற்றூர்களையும் தீக்கிரையாக்கினர். மறமிக்க மக் கள் பலர் மாண்டனர். மறக்குடி மகளிர் தீப்புகுந்தனர். கடவுள் நிலையங்

* இது நாகமாமலைச் சோலை என்று இருந்திருக்கலாமோ? என்ற ஐயத்தை எழுப்புகிறது.

களும் கல்வி நிலையங்களும் சீரழிந்தன. வெளிநாட்டாராற் புகழப்படும் வீறுபெற்றிருந்த தமிழ்மக்கள் ஒளியிழந்து குன்றினர். பண்டை வேந்தர்கள் பாணர் கூத்தர் புலவர் அந்தணர் என்ற இவர்கட்கு நல்கியிருந்த ஊர்களை அரசியலிற் சேர்த்துக்கொண்டு, அவ் வேந்தர் பெற்றிருந்த புகழ் விளக்கத்தை மங்குவித்தனர். தத்தம் மனைகளிலிருந்து மானமுடன் வாழ்க்கை நடத்திய மக்கள் மானமிழந்து மனைதோறும் இரந்துண்டு வாழும் வறுமை நிலை எய்தப் பண்ணினர். அதனால் என் முன்னோனை நற்கொற்றன் பெற்ற வேள்விக்குடி அரசியலில் சேர்ந்து விட்டது," என்று நற்சிங்கன் எடுத்துரைத்தான். சடையபராந்தகன் உள்ளத்தில் களப்பிரர்பால் பெருவெறுப்பும் ஏனை அந்தணர் முதலியோர்பால் கழிபேரிரக்கமும் பெருகின. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து தான் காக்கும் பாண்டிநாட்டிற்குப் பகைவர் செய்த தீங்கினைக் கேட்க உள்ளம் பதறிற்று. உடனே 'மறையோய் இனிக் கூறுவதைச் சுருக்கச் சொல்லுக,' என்றான். நற்சிங்கன், அஞ்சி,

"ஒல்காத வேற்றானையோடு ஒதவேலியுடன் காத்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி யெனும் பரமேசுரனால்
வேள்விக்குடி யெனப்பட்டது கேள்வியிற் றரப்பட்டதனைத்
துளக்க மில்லாக் கடற்றானையாய், களப்பிரரால் இழக்கப்பட்டது"

என்று விண்ணப்பஞ் செய்தான்:

கேட்ட நெடுஞ்சடையன் முறுவலித்து, 'நன்று நன்று' எனத் தலையசைத்து 'நீ சென்று பாகனூர்க் கூற்றத்து நாட்டவர் கூடிய மாநாட்டில் நினக்குரிய கிழமையைக் காட்டுக,' என்று கட்டளையிட்டுப் பாகனூர்க் கூற்றத்து நாட்டவரை மாநாடு கூடுமாறு பணித்தான். நற்சிங்கனும் நாடு கூடுமாறு விண்ணப்பஞ் செய்துகொண்டான்.

பாண்டிநாட்டுப் பாகனூர்க் கூற்றத்து நாட்டவர் சின்னாட்குப் பின் கூடினர். கூடின மாநாட்டுப் பேரவையில் காமக்காணி நற்சிங்கன் பழம் பொத்தகங்களையும் சான்று கூறும் முதுவர்களையும் கொணர்ந்து காட்டினன். நாட்டவர் ஆராய்ந்து நற்சிங்கன் கூறியது

உண்மையெனத் தேர்ந்து வேந்தனுக்குத் தெரிவித்தனர். வேந்தன் ஏனாதிச் சாத்தஞ் சாத்தனார் முதலிய தானைத் தலைவர்களைக் கூட்டி ஆராய்ந்து முடிபு செய்து, 'மேனாள் எம் குரவரால் தரப்பட்டதனை எம்மாலும் தரப்பட்டது,' என்று செம்மாந்து எடுத்துரைத்துக் கொற்கைகிழான் காமக்காணி நற்சிங்கற்கு நீரோடு அட்டிக்கொடுத்தான்.

இச் செயல் பின்னர்ச் செப்பேட்டில் வரையப்பட்டது. அக்காலப் பாண்டியருடைய மெய்க்கீர்த்தியை வடமொழியில் சருவகிருதுயாஜியாகிய வரோதய பட்டரும் எஞ்சிய பகுதிகளைத் தமிழில் ஏனாதி சாத்தஞ் சாத்தனாரும் எழுதித் தந்தனர். இஃது இப்போது வேள்விக்குடிச் செப்பேடு என வழங்குகிறது.

வேள்விக்குடிச் செப்பேடு பெற்று அதன் வழியாகத் தன் முன்னோர் பெற்ற செல்வத்தை மீட்பித்த சுவரன்சிங்கன் தான் பெற்றதனைத் தானேமேற்கொள்ளாது தன் உடன்பிறந்தார்க்கும் பிறர்க்கும் பகுத்தளித்தான். பெற்றதனை முதலில் அவன் மூன்று கூறு செய்து ஒருகூற்றைத் தனக்கு வைத்துக்கொண்டு ஏனை இருகூறுகளை ஐம்பது வேதியர்க்கு நீரோடு அட்டிக் கொடுத்தான். தனக்காக வைத்த ஒரு கூற்றிலும் தம்பிமார்க்கு நான்கும் தன் சிற்றப்பனார் மக்களுக்கு ஆறுமாகப் பங்கு செய்து தந்தான். இறுதியிலும் மூன்று கூற்றூரும் ஒன்றுகூடி இச் செப்பேட்டு வக்கணையைச் செவ்வையாய்ப் பாடித்தந்த ஏனாதி சாத்தஞ் சாத்தனார்க்கு நான்கு படாகாரம் (நிலவளவு வகை) நிலம் கொடுத்துச் சிறப்பித்தனர். இச்செய்தி முற்றும் வேள்விக்குடிச் செப்பேட்டில் நன்கு தெளியக் காணப்படுகின்றன. சேரமான் உதியன் வேள்வி செய்த குழுமூரும் இவ் வேள்விக்குடிப் பகுதியில் தான் உளது [1] என்பதையும் இப் பங்கீட்டால் அறிகின்றோம்.

---

[1] Epigraphica Indica, Vol XVII. No. 16. pp. 291-309.

# கொற்கை

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

பொருநையாறு இன்று கடலொடு கலக்கும் இடத்திற்கு நான்கு கல் உள் தள்ளி அவ் யாற்றின் வடகரையில் கொற்கை என்னும் பெயருடன் ஒரு சிற்றூர் இருக்கின்றது. பண்டைக் காலத்தில் பொருநையாறு இவ்வூர் அருகிற்றான் கடலொடு கலந்து வந்தது. பொருநையாற்று மண்ணும் மணலும் பல நூற்றாண்டுகளாக வந்து படிப்படியாக மேடிட்டுக் கடலைப் பின்னோக்கிச் செல்லும்படி செய்துவிட்டதால் கொற்கை, துறைமுகநகரத்திற் குரிய வசதியை இழந்து விட்டது. இன்றுள்ள கொற்கையிலும் சுற்றுப்புறங்களிலும் கிளிஞ்சல்களும் முத்துச் சிப்பிகளும் தரைக்கடியில் சிறிது ஆழத்தில் கிடைத்தலே, கடல் இந் நிலப்பகுதியை அடுத்து இருந்தமைக்கு ஏற்ற சான்றாகும். கொற்கைக்குப் பின்னர்க் காயல் (இன்றைய 'பழைய காயல்') பாண்டியர் துறைமுகநகரமாக விளங்கத் தொடங்கியது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காயலே சிறந்த துறைமுக நகரமாக இருந்தது என்பதை மார்க்கோபோலோ குறித்துள்ளார். பின் நூற்றாண்டுகளில் கொற்கை பற்றிய பேச்சே யாண்டும் காணப்படவில்லை. எனவே, ஏறத்தாழக் கி. பி. 12-ஆம் நூற்றாண்டுடன் கொற்கைப் பொலிவு மறைந்து விட்டது என்று கொள்ளுதல் தவறாகாது.

கொற்கை நகரம் சங்கநூல்களில் பேசப்படுதலால், அதன் பழைமையை நாம் நன்கு உணரலாம். கி. பி. முதல் நூற்றாண்டில் தென் இந்தியக் கரையோரமாக வந்த 'பெரிப்ளூஸ்' என்ற பிரயாண நூலின் ஆசிரியரும் கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் இங்ஙனமே வந்த தாலமியும் இப் பண்டை நகரத்தைச் சிறந்த துறைமுக நகரம் என்று குறிப்பிட்டுள்ளனர். குமரி முனையைச் சுற்றி வந்த கிரேக்க வணிகர் முதலில் இத் துறைமுகத்துக்குத்தான் வந்தனர் என்று குறித்துள்ளனர். மேலும், அவர்கள் மன்னார் வளைகுடாவைக் 'கொற்கை வளைகுடா' என்றே குறித்துள்ளமை, அவர்கள் காலத்தில் கொற்கை பெற்றிருந்த பெருஞ் சிறப்பினை நன்கு விளக்குவதாகும்.

சங்க நூற்களிற் பாராட்டிப் பேசப்பெற்ற கொற்கைத் துறைமுகம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே புகழ் பெற்றிருந்தது என்று கருதுதல் தவறாகாது. பாரசீகர், அரேபியர், பொனீஷியர், எத்தியோப்பியர், கிரேக்கர், உரோமர் என்ற மேலைநாட்டவரும் பர்மியர், சீனர் முதலிய கீழைநாட்டவரும் வாணிகத் துறையில் கொற்கைத் துறைமுகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்று ஆராய்ச்சியாளர் அறைகின்றனர். கொற்கைப் பெருந்துறை முத்தெடுக்கும் தொழிலிலும் சங்குகளை எடுத்துப் பொருள்கள் தயாரிப்பதிலும் பெயர் பெற்றிருந்தது. எனவே, முத்துக்களும் சங்குகளும் சங்கால் செய்யப்பெற்ற பலவகைப் பொருள்களும் மிக்க அளவில் அயல்நாடுகட்கு ஏற்றுமதியாயின; மேலும் தமிழ் நாட்டிற் கிடைத்து வந்த தங்கம், யானைத் தந்தம், கருங்காலி, சந்தனம் முதலிய விலையுயர்ந்த மரங்கள் யானைக் கொம்பு, மயில்தோகை, கிராம்பு, ஏலம் முதலிய மணப்பொருள்கள், பட்டாலும் பருத்தியாலும் இயன்ற ஆடைகள், அரிசி முதலியன அயல் நாடுகட்கு அனுப்பப்பட்டன.

ஏறத்தாழக் கி. மு. 1400-இல் வாழ்ந்துவந்த அத்தீனிய அரசர்கள் இக் கடல் வாணிக உறவினால் பாண்டியர்களை மதித்துப் போற்றினமைக்கு அறிகுறியாகப் 'பண்டியோன்' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டனர். கருங்கடலின் கரையிற் கட்டப்பட்ட வாணிக நகரங்களும் பாண்டியனது துறைமுகப் பட்டினத்தின் பெயரால் 'கொல்கீஸ்' (கொற்கை) என வழங்கப் பெற்று வந்தன. பின் நூற்றாண்டுகளில் உரோமப் பேரரசர்களான அகஸ்டஸ், கிளாடியஸ் முதலியோர் பாண்டி வேந்தருடன் நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்; பாண்டியர் அவைக்குத் தூதர்கள் மூலம் பரிசுப் பொருள்களை அனுப்பித் தங்கள் அன்பையும் நட்பையும் அறிவித்துக் கொண்டனர்.

"ஐரோப்பிய நாடுகட்கு மிகுதியான அரிசியை ஏற்றுமதி செய்த நகரம் பொருநைக்கரையில் இருந்த கொற்கையே யாகும். இத்தகைய வாணிகம் அக் காலத்தில் கிரேக்கர் வசம் இருந்தது, கிரேக்கர் முன்பு இந்திய வாணிகம் பாரசீகர், பொனீஷியர் என்பவரிடமும் பெரும்பான்மை இருந்தது: தமிழ்ச் சொற்களாகிய தோகை, அரிசி, இஞ்சி முதலியன ஹீப்ரு முதலிய மொழி நூல்களில் காணப்படுகின்றமை, இப் பண்டைக் கடல் வாணிக உண்மையை வலியுறுத்துவதாகும்," என்று ஆராய்ச்சி அறிஞர் கூறுகின்றனர்.

சங்க காலத்திற்குப் பிறகு கொற்கை பெற்றிருந்த சிறப்பை நன்கு அறிவிக்கும் சான்றுகள் மிகுதியாக இல்லை. பாண்டிய நாடு கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர் ஆட்சியில் இருந்தது; பின்னர் ஏறத்தாழ மூந்நூறு வருட காலம் சோழராட்சியில் இருந்தது. அக்காலத்தில் பாண்டிய நாடு இராசராசப் பாண்டி நாடு எனவும், கொற்கை சோழேந்திர சிம்ம சதுர்வேதி மங்கலம் எனவும் பெயர்களைப் பெற்றிருந்தன. அக் காலத்திற்றான் ஆட்சி மாறுபாட்டாலும் முன்னர்க் கூறப்பெற்ற இயற்கைக் கேடுகளாலும் கொற்கை தன் பொலிவை இழந்துவிட்டது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் வந்த பாண்டியர் காலத்தில் கொற்கையின் சிறப்பைக் காயல் துறைமுகம் பெற்றுவிட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தின் கீழ்க்கரையில் ஏறத்தாழ நாற்பதாண்டுகள் தங்கிக் கிறிஸ்தவ சமயத் தொண்டு செய்தவரும் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற இணையற்ற நூலை எழுதி அழியாப் புகழ் பெற்றவருமான கால்டுவெல் ஐயர் சென்ற நூற்றாண்டில் இக் கொற்கையைப் பார்வையிட்டார்; ஆங்காங்குச் சில இடங்களைத் தோண்டி ஆராய்ச்சி நிகழ்த்தினர்; கொற்கையில் சங்குத் தொழிற்சாலை ஒன்று இருந்தமைக்குரிய அறிகுறிகளைக் கண்டார்; அங்குப் பலவகை நாணயங்கள் அவருக்குக் கிடைத்தன. அப் பெரியார் வேலைப்பாடமைந்த பெரிய தாழிகள் பலவற்றைக் கண்டார்; அங்குள்ள 'அக்க சாலை' என்னும் சிற்றூரைப் பார்வையிட்டு, அவ்விடத்தில் பண்டைப் பாண்டியர் நாணயங்களைச் செய்துவந்தனர் என்ற கருத்தை வெளியிட்டார். நெல்லைமாவட்டத்தின் கிழக்குப்பகுதிகளில் பழைய நாணயங்கள் மிகப்பலவாகக் கிடைக்கின்றன. வேறு இடங்களில் கிடைக்காத சதுர நாணயங்கள் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. அவையனைத்தும் கொற்கைப் பாண்டியருடையனவே என்பதில் ஐயம் இல்லை.

"கொற்கையிற் கிடைத்த செப்பு நாணயங்கள் சிலவற்றில் முதலாம் இராசேந்திர சோழன் (கி. பி. 1012-1044) உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் ஒருபுறத்தில் அவனது நின்ற கோலமும் மற்றொரு புறத்தில் அவனது இருந்த கோலமும் பொறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நாணயங்கள் சோழநாட்டின் வட எல்லை முதல் குமரிமுனை வரையுள்ள தென்னிந்தியப் பகுதிகளில் காணப்படுகின்றன. இதனால், சோழர் கொற்கை உள்ளிட்ட

பாண்டியநாட்டைக் கைப்பற்றி யாண்டனர் என்பது தெளிவாகிறதன்றோ?" என்று கால்டுவெல் பாதிரியார் கூறியிருத்தல் கவனிக்கத் தகும்.

சிறந்த முறையில் பலநூற்றாண்டுகளாகத் தொடர்ந்து கடல்வாணிகம் நடைபெற நிலைக்களமாக இருந்த கொற்கை, சோழரது கடற்றுறைப் பட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினம் போன்று அயல்நாட்டு வணிகர் தங்கியிருக்கத் தக்கமாடமாளிகைகளைக் கொண்ட தெருக்களையும், நம் நாட்டு வணிகர் வாழத்தக்க வளம் மிகுந்த தெருக்களையும், பலதுறைத் தொழிலாளர்கள் வாழத்தக்க தெருக்களையும், பல தொழிற்சாலைகளையும், வணிக இடங்களையும், கப்பல்களில் ஏற்றத்தகும் பொருள்களை வைக்கத் தக்க பண்டசாலைகளையும், இறக்குமதியாகும் பொருள்களை வைக்கத் தக்க பண்டசாலைகளையும், பெரிய கடைத் தெருக்களையும், கோவில்களையும், பிறவற்றையும் தன்னகத்தே பெற்றிருந்தது என்பது கூறாதே அமையுமன்றோ? அஃது அரசன் வாழ்ந்த இடமாகவும் இலங்கியது என்று சிலப்பதிகாரம் முதலிய தொன்னூல்கள் செப்புவதால், அரண்மனையையும் பெற்றுப் பெரும் பொலிவுடன் விளக்கமுற்றிருந்தது என்று கருதுதல் பொருத்தமேயன்றோ? சுருங்கக்கூறின், சுமேரியர் நாகரிகத்தின் உயிர் நாடியாக விளங்கிய பாபிலோன் நகரம் போலப் பாண்டியரது நாகரிகவளத்திற்கு உயிர்நாடியாகக் கொற்கைப் பெரு நகரம் விளங்கியது என்று சொல்வது ஏற்புடையது.

கொற்கை தனது பெருந் துறை முத்துக்களாலும் கடல் வாணிகத்தாலும் பாண்டியர்க்குப் பெருஞ் செல்வம் அளித்து வந்த காரணத்தாற்றான், பாண்டியனைக் "கொற்கைக் கோமான் என்றும்" "கொற்கையாளி" என்றும் புலவர்களும் குடிமக்களும் உளமகிழ்ந்து பெருமிதத்தோடுபாராட்டலாயினர்.

## இன்றைய கோற்கை [1]

இன்றைய கொற்கை மிகச் சிறிய சிற்றூராக இருக்கின்றது. இச் சிற்றூருக்கும் அக்கசாலை என்னும் இடத்திற்கும் இடையே ஏரி போன்ற பரந்த

---

[1] நான் கொற்கையை 1-10-56 இல் சென்று கண்டேன். இதனைப்பார்க்க எனக்குப் பேருதவி புரிந்தவர் ஸ்ரீவைகுண்டம் கோட்டைப் பிள்ளைமாருள் ஒருவரான திருவாளர் இரா. இலக்குவன் என்பவர் கொற்கை பற்றிய பல் செய்திகளை எனக்குத் தெரிவித்தவர் கொற்கையில் உள்ள திரு. கோ. சு. சிவராமப் பிள்ளை என்பவராவர்.

இடம் அமைந்திருக்கிறது. அப் பரந்த இடத்தின் நடுவில் சிறு கோவில் ஒன்று இருக்கிறது. அது வெற்றிவேல் அம்மன் கோவில் என்று பெயர் பெற்றுள்ளது. அங்குப் பழையகாலத்தில் கண்ணகியின் உருவச்சிலை இருந்ததாகவும், அஃது எவ்வாறோ மறைந்து போனதாகவும், அவ்விடத்தில் இப்பொழுது துர்க்கையின் சிலை வைக்கபபட்டிருப்பதாகவும் எங்களுக்குப் பல இடங்களைக் காட்டிவந்த பெரியவர் ஒருவர் கூறினர்.

கோவலன் மதுரையில் கொலையுண்டதற்குப் பதிலாகக் கண்ணகி சீற்றம் பொங்கி மதுரையை அழித்தாள் அல்லவா? அப் பத்தினித் தெய்வத்தின் உள்ளத்தைக் குளிர்விக்க அப்பொழுது கொற்கையை ஆண்ட வெற்றிவேற் செழியன் ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டான் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. அந்த வெற்றிவேற் செழியன், தான் ஆண்ட கொற்கையில் கண்ணகியம்மனுக்குக் கோவில் எடுப்பித்திருத்தல் இயல்பே. அவன் அவ்வம்மனை வழிபட்டிருத்தலும் பொருத்தமேயாகும். வெற்றிவேற் செழியனால் வழிபடப்பட்ட அம்மன், 'வெற்றிவேல் அம்மன்' எனப் பெயர் பெற்றதில் வியப்பில்லையன்றோ?

இப்பொழுது கோவிலில் உள்ள அம்மனுக்குச் 'செழுகை நங்கை' என்பது பெயர் என்று ஊரார் உரைக்கின்றனர். 'செழியநங்கை' (செழியன்—பாண்டியன்) என்ற பெயரே இவ்வாறு 'செழுகை நங்கை' என மாறி வழக்குப் பெற்றிருக்கலாம். செழியனால் பூசிக்கப் பெற்ற நங்கை 'செழிய நங்கை' எனப் பெயர் பெற்றுள் போலும்! இக் கோவிலுக்கு அருகில் சிலஇடங்களில் பழைய உறைக்கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நாங்கள் அவற்றுள் ஒன்றன் நீரைப் பருகினேம். அது குடி நீராகவே இருக்கின்றது. ஏரி போன்ற அவ் வகன்ற இடமெங்கும் பண்டைக்கால மட்பாண்டச் சிதைவுகள் காணப்படுகின்றன. இவையும் உறைக்கிணறுகளும் கோவிலும் அங்கு இருத்தலை நோக்க, அப்பரந்த இடமுழுமையும் பண்டைக் காலத்தில் கொற்கை நகரின் ஒரு பகுதியாக இருந்திருத்தல் வேண்டும் என்று கருத இடந்தருகிறது. அப் பரந்துள்ள பகுதி பிற்காலத்தில் பள்ளமாகி நீர் நிற்கும் இடமாக மாறியிருத்தல் வேண்டும்.

வெற்றிவேலம்மன் கோவிலுக்கு நேர் மேற்கில் பழுதுபட்ட சிவன் கோவில் ஒன்று வாழைத்தோட்டத்துக் கிடையில் இருக்கிறது. இதனில் இப்பொழுது சிவலிங்கம் இல்லை; பிள்ளையார் திருவுருவம் இருக்கின்றது. கோவிலின் கருவறை மட்டுமே எஞ்சி நிற்கின்றது. இதன் சுவர்களில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக் கோவிலை 'அக்கசாலை ஈசுவர முடையார் கோவில்' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. அக்கசாலை என் பது, முன் சொல்லப்பட்ட ஏரி போன்ற பரந்த வெளிக்கு அப்பால் உள்ள சிற்றூராகும். பண்டைக் காலத்தில் அக்கசாலை என்பது, இச்சிவன் கோவில் உள்ள பகுதியையும் உள்ளடக்கியதாக இருந்ததென்று கருத இக் கோவில் கல்வெட்டு இடந்தருகிறது. அக்கசாலையில் இன்றும் நிலத்தைத் தோண்டும் பொழுது பல நாணயங்கள் கிடைக்கின்றன என்றும், அங்குப் பலகாலமாக வாழ்ந்தவருட் பெரும்பாலர் பொற்கொல்லரே என்றும், அவர்கள் இப் பொழுது பிழைப்பைக்கருதிப் பலவூர்கட்குச் சென்றுவிட்டனர் என்றும் ஊரார் உரைக்கின்றனர்.

முன் சொல்லப் பெற்ற கோவில் கல்வெட்டுக்களில் கொற்கை 'மதுரோதய நல்லூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையின் சிறப்புக்குச் செல்வம் கொழித்த கொற்கை பெருங் காரணமாக இருந்தமை கருதியே கொற்கைக்கு 'மதுரோதய நல்லூர்' எனப் பிற்கால மன்னர்கள் பெயர் இட்டனர் போலும்!

கொற்கைச் சிற்றூரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஒன்றேகால் அடிச் சதுரச் செங்கற்கள் கிடைக்கின்றன. நிலத்தை ஐந்தடி ஆழத்தில் தோண்டும்பொழுது களிமண்ணும், பத்தடி ஆழத்தில் சங்குகளும் நிரையக் கிடைக்கின்றன; பதினேழ்து அடி ஆழத்தில் தோண்டும்பொழுது ஒருவகைச் சேறு கிடைக்கின்றது. இங்கு உப்பங்கழி இருந்ததென்பதற்கும் கடல் அருகில் இருந்ததென்பதற்கும் இவை உரிய அறிகுறிகள் என்று ஊர் முதியவர் உரைத்தனர்.

கொற்கையம்பதியில் பல நூற்றாண்டுகளாகப் புகழ் பெற்றது என்று ஊரார் உரைக்கும் வன்னிமரம் ஒன்று இருக்கின்றது. அது நேரே நிமிர்ந்து இராமல் தரையை ஒட்டியபடி பத்தடி சென்று, மேலே நிமிர்ந்துள்ளது.

அதன் அடிப்பாகத்தில் பெரிய பொந்து அமைந்திருக்கிறது. அதற்கு எதிரில் சாலை நடுவே சமண தீர்த்தங்கரர் சிலையொன்று மண்ணுள் பாதியளவு புதையுண்டு இருக்கிறது. மற்றொரு தீர்த்தங்கரர் சிலை ஊரையடுத்த தோட்டம் ஒன்றில் காணப்படுகிறது. இவை இங்கு இருத்தலை நோக்க, இவ்வூரில் பண்டைக் காலத்தில் சமண சமயத்தவரும் வாழ்ந்திருந்தனர் என்பதை அறியலாம்.

கொற்கையைப் பற்றிப் பல குறிப்புக்களைச் சேர்த்து வைத்துள்ளவரும் கொற்கைக்கு வரும் ஆராய்ச்சியாளர்க்கு உறுதுணையாக இருப்பவருமாகிய சிவராமபிள்ளை என்னும் முதியவரிடம் ஒரு செப்பேட்டு நகல் இருக்கின்றது. "ஸ்ரீவரகுண மகாராயர்க்கு யாண்டு 13 என்பது காணப்படும். அப் பட்டயத்தில் 'பழங்காசு, ஆயிரத்து நானூறு', 'பொன் எட்டு', 'அரண்மனைக்கு மரக்கல ராயர் ஆயிரம் பொன்னும், உப்பு லாவத்தில் நூறு பொன்னுக்கு இருபத்தைந்து பொன்னும் செலுத்தக் கடவர்'...........ஒரு பொன் எடையும் அதற்கு மேற்பட்ட ஆணி முத்தும் வலம்புரிச் சங்கும் அகப்பட்டால் அவைகளை மரக்கல ராயர் அரண்மனைக்குச் செலுத்தி விடவும்......" என்னும் வாசகம் காணப்படுகின்றது.

இவற்றை நோக்க, அக் காலத்தில் 'பழங்காசு' என்றொரு பழைய நாணயம் வழக்கில் இருந்தது, 'பொன்' என்பது ஒரு நாணயத்தின் பெயர், கடல் வாணிகத்துக்காகப் பல மரக்கலங்களை வைத்திருந்தவர் மரக்கல ராயர் எனப் பெயர் பெற்றார், உப்பு உண்டாக்கும் தொழிலும், உப்பு வாணிகமும் கொற்கைக் கருகில் நடைபெற்றிருக்கலாம், 'பொன்' என்னும் பெயர் நிறுத்தல் அளவைப் பெயராகவும் இருந்தது, 'ஆணிமுத்து' என்பது முத்துக்களில் சிறந்தது, சங்குகளில் 'வலம்புரிச் சங்கு' உயர்ந்தது, இவை இரண்டும் அக் காலத்தில் கொற்கைப் பெருந்துறையில் கிடைத்து வந்தன என்னும் விவரங்களைத் தெளிவாக அறியலாம்.

கொற்கையில் இன்று வாழும் முதியவர்கள் கொற்கை வளநாடு பற்றிக் கீழ்க்காணப் பெறும்[1] பழம்பாடல் ஒன்றைப் பாடுகின்றனர்.

---

[1] கொற்கை ஈசுவரமூர்த்திப் பிள்ளை என்ற முதியவர் எங்கள் முன்னிலையில் இப் பாடலைப் பாடிக்காட்ட, தென்காசி வித்துவான் நூறலம் என்பவர் இதை எழுதினர்.

"ஆலமரம் அரசமரம் ஆனதிந்த நாடு
அதன்பிறகு புன்னைமரம் ஆனதிந்த நாடு
நாலாம்யுகம் தன்னில்வன்னி மரமான நாடு
நாற்றிசையும் கீர்த்திபெற்று நலமிருந்த நாடு
அக்கரையும் மதிபுனையும் சொக்கலிங்க ஈசன்
அழகுமுடி கொண்டஜயன் அருள்புரியும் வண்மை
திக்கனைத்தும் புகழ்கின்ற ஜெகதேவி செழுகிங்கை
சென்னிவைற்றி வேல்தாய் முக்கியமாய் அருள்புரியும்
கோட்டைவாழ் ஐயன் முகனையுடன் சிறந்திருக்கும்
நாவலடி மெய்யர் …… ……
தக்கார்புகழ் முக்காணி வடக்குவாழ் செல்வி
மனமகிழ்ந்து அரசுசெய்யும் [1] போற்கைவள நாடு
சீரான தென்மதுரைத் தேசமது செழிக்கத்
திருவளரும் பொற்கையென்று தினம்புகழப் பெற்றோம்
காராளர் வம்சமிது நகரமிது செழிக்கக்
கணையோகன் அரசுசெய்யும் பொற்கைவள நாடு."

---

[1] சிலப்பதிகாரத்திற் கூறப்பெற்றுள்ள போற்கைப் பாண்டியன் இங்கு ஆண்டான் என்றும், அதனால் 'பொற்கை' என்பது இவ்வூரின் பெயராயிற்று. என்றும் ஊரார் உரைக்கின்றனர். ஆயின் சங்க நூல்களில் இவ்வூர் 'வெற்கை' என்றே பேசப்படுகிறது.

# தமிழிலக்கியம் கற்க வழிமுறை

திரு. அ. கி. பரந்தாமனார், M. A., தியாகராசர் கல்லூரி, மதுரை.

ஒரு நாட்டின் உயர்வையும் தாழ்வையும், நாகரிகத்தையும் கலைப் பண்பையும் மன வளர்ச்சியையும் குண நிலையையும் விருப்புகளையும் வெறுப்புகளையும் எடுத்துக் காட்டுவது அந்நாட்டின் இலக்கியமே யாகும். ஒரு நாட்டு மக்களின் எண்ணங்களையும் மனப் போக்கையும் காட்டும் கண்ணாடியும் அந்நாட்டு இலக்கியமே யாகும். மக்கள் வாழ்க்கையில் கண்ட உண்மைகளையும் நுகர்ந்த நுகர்ச்சிகளையும் எண்ணிய எண்ணங்களையும் விரும்பிய விருப்பங்களையும் மொழிவழியாக எழுத்துருவத்தில் வடிப்பது தானே இலக்கியம். ஆதலால் அந்த அந்தக் கால இலக்கியம் அந்த அந்தக் கால மக்களின் மனப்போக்கையும் பண்பாட்டையும் புலப்படுத்தும் வரலாறாக ஓரளவாக விளக்குகிறது எனலாம். ஆகையால் ஒரு நாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் அந்நாட்டின் வரலாற்றை மட்டும் கற்பது போதாது; அந்நாட்டின் இலக்கியத்தையும் கற்க வேண்டும். வரலாறு ஒரு நாட்டின் புறவாழ்வை மட்டுமே காட்டும்; இலக்கியமோ அந்நாட்டின் அகவாழ்வையும் காட்டும். இலக்கியமும் நாட்டு வரலாறும் இரட்டைச் சகோதரிகள் என்றறிக.

தமிழன் தன்னாட்டின் மேன்மையையும் சிறப்பையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றாலும், தம்முன்னோர்களின் எண்ணங்களையும் வாழ்ந்த முறைகளையும் அறிந்துகொள்ள வேண்டுமெனினும், தமிழிலக்கியம் கற்பது இன்றியமையாதது என்று சொல்லத் தேவையில்லை. தமிழ் நாட்டில் வாழும் பிற இனத்தாரும் தமிழர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளத் தமிழிலக்கியங்களைக் கற்கவேண்டும் என்று சொன்னால் மிகையாகாது. இந்நாட்டில் அக்காலத்தில் தொண்டுசெய்ய வந்த ஐரோப்பியர்கள் இக் காரணத்தாலே தமிழிலக்கியத்தை நன்கு கற்றார்கள்; ஆதலால் அவர்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் அரும்பணியாற்றியதோடு தமிழிலக்கியம் தந்த இன்பத்தையும் நுகர்ந்து இன்புற்றார்கள்.

தமிழிலக்கியம் கற்பதால் ஒருவர், தமிழக மக்கள் மனவளர்ச்சியையும் தெரிந்துகொள்வதோடு, கலையுணர்ச்சியையும் அழகுணர்ச்சியையும் பெற்று வாழ்க்கையை வளம்படுத்திக்கொள்ள முடியும்; தண்டமிழர் பண்பாட்டை அடைந்து சிறந்து விளங்கக் கூடும்; நாட்டுப்பற்றுப் பெற்றுத் தாய்நாட்டின் முன்னேற்றத்திற் றுப்பாடுபட்டு நன்மை புரிய முடியும்; எல்லாவற்றிற்கும் மேலாக மனப் பண்படைந்து பிற வகையில் அடைய முடியாத இணையற்ற இலக்கிய இன்பத்தை எய்த முடியும். தமிழிலக்கியம் கற்பவர், ஆணாயினும் பெண்ணாயினும், தமிழராக வாழ முடியும் என்று சுருங்கக் கூறலாம்.

அறிவு பெறுவதற்குப் படிப்பதாயினும், ஓய்வு நேரத்தை நல்வழியில் பயன்படுத்தத் தமிழிலக்கியத்தைக் கற்று இன்புற வேண்டுவதாயினும், முறையின்றிப் படிப்பதனால் எந்தவிதமான நன்மையும் அடைய முடியாது. "தமிழன் தமிழிலக்கியம் கற்க ஒரு முறை வேண்டுமா? புரிந்துகொள்ள முடியாதா? இலக்கியம்படிக்க இலக்கணம் ஓரளவு படிக்க வேண்டுமோ? இது என்ன தொல்லை! பண்டிதர்கள் செய்யவேண்டுவது இது. ஏதாவது விருப்பமான நூலை எடுத்துப் படிக்க வேண்டும் அவ்வளவுதான். புரியாமற் போகுமா? புரியாமற் போனால் அது படிக்கத் தகுந்த இலக்கியமே அல்ல. இரும்புக்கடலை இலக்கியங்களை எறிந்துவிடு கடலில்" என்று ஒரு சிலர் கூறுகின்றனர். இது மொழிநிலையை அறியாதார் கூறும் கூற்று. தமிழனாக இருந்தாலும் தமிழ் மகளாக இருந்தாலும் தேருந்தோறும் இன்பமளிக்கும் தமிழிலக்கியத்தைச் சிறிது முயன்று விஞ்ஞானமுறையில் கற்றாலன்றிப் பெரும் பயனடைதல் அரிது.

தமிழ் மொழி முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் இளமை குன்றாக் கன்னித்தன்மையுடையதாயினும் இலக்கண வரம்பு கடவாத மொழி. "இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணவும் படுமோ?" என்று பரஞ்சோதி முனிவர் தமிழின் தன்மை உணர்ந்து கூறியது மிகவும் உண்மை. எனினும், இலக்கண வரம்புக்குட்பட்டுத் தொன்று தொட்டு வந்துள்ள மரபு குன்றாது விளங்கும் இச்செம்மொழியைக்கற்று இன்புறுவதற்கு முற்காலத்தைப் போல இக் காலத்தில் அரும்பாடுபட்டுக் கற்க வேண்டுவ

தில்லை; ஆயினும் ஓரளவு இலக்கணத்தையும் தமிழ் மரபையும் தமிழக வரலாற்றையும் அறிந்து கொள்வது அவசியமாகிறது.

"கண்டது கற்கப் பண்டித னுவான்" என்னும் பழமொழியை நம்பிக் கையில் கிடைக்கும் நூல்களை யெல்லாம் கண்டவாறு படித்து விட்டால் தண்டமி ழிலக்கியத்தைக் கற்றதாகாது. பண்டைக் காலத்தில் மக்கள் குருகுல முறையில் வரிசையாகத் தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழறிவில் சிறந்து விளங்கினர்கள். ஆத்திசூடி படித்து, அந்தாதி படித்து, நிகண்டு படித்து, சிற்றிலக்கணம் படித்து, கிருஷ்ணன் தூது படித்து, நன்னூல் படித்து, வேறு இலக்கியங்கள் படித்து, அகப்பொருள் படித்து, புறப்பொருள் படித்து, தண்டியலங்காரம் படித்து, காரிகை படித்து, கவிபாடத் தொடங்கி, சங்க இலக்கியம் படித்து மொழித் தேர்ச்சி பெற்றுர்கள். அண்மைக் காலம் வரையில் ஓர் ஆசிரியரை அடைந்து பாடங் கேட்டல் மரபாக இருந்து வந்தது. காலஞ் சென்ற மறைமலை அடிகளார் நாகையில் ஓர் ஆசிரியரை அடைந்து நானூறு வெண்பாக்களைக் கொண்ட நாலடியார் என்னும் இலக்கியத்தை நாள் ஒன்றுக்குப் பாடல் ஒன்றுக நானூறு நாட்கள் படித்ததாகத் தம்முடைய சொற்பொழிவில் பல்லாண்டுகளுக்கு முன்னே சொல்லக் கேட்டிருக்கிறேன். படித்த நூல்களை யெல்லாம் மனப்பாடம் செய்தது பண்டை வழக்கு. இராமாயணப் பாடல்களை ஆயிரக்கணக்காக மனப்பாடமாகச் சொல்லுகிறவர்கள் இன்றும் தமிழகத்தில் இல்லாமல் இல்லை. சிறந்த புலமைக்கு மனப்பாடம் இன்றியமையாததுதான். பண்டையோர் சிலர் ஒருமுறை ஒருநூலைப் பாடங் கேட்டதோடு உளநிறைவு கொள்ளாமல் இருமுறையும் மும்முறையும் கேட்டதுண்டு. இது பவணந்தி முனிவர் தம் நன்னூலில்,

"ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின்
பெருக நூலில் பிழைபா டிலனே"

என்றும்,

"முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்"

என்றும்,

கூறியுள்ளதால் நன்கறியலாம். ஒரு முறைக்கு மேல் ஒரு நூலைப் பாடங் கேட்டால், நன்னம்பிக்கையற்ற நிலையையே காட்டும். இன்றும் இலக்கிய இலக்கணங்களைப் பாடங்கேட்கும்முறை இருந்துவருகிறது. தமிழ்க் கல்லூரிகளிலும் ஆங்கிலக் கல்லூரிகளிலும் தமிழ் கற்பவர்கள், ஆசிரியர்களிடந்தான் பாடங்கேட்டுக் கற்றுவருகிறார்கள். அன்று மாணவர்கள் தனித்தனியாக வெவ்வேறு ஆசிரியரிடம் பாடம் கற்றார்கள்; இன்று ஒரே இடத்தில் வெவ்வேறு நூலுக்கு வெவ்வேறு ஆசிரியர்களிடம் பாடம் கற்கிறார்கள். இதுதான் வேற்றுமை. ஆசிரியரிடம் கற்காமல் எந்த மொழியின் அடிப்படை அறிவும் வந்துவிட முடியாது. உயிருள்ள மாணவர்களுக்கு உயிருள்ள ஆசிரியர்களே கற்பிக்கவேண்டும். வானொலி ஆசிரியரிடத்தைக் கைப்பற்றிவிட முடியுமா? முடியாது. அடிப்படை அறிவு இல்லாதவர்கள் சிறிய இலக்கியத்தைக் கூடக் கற்பது எளிதாகாது என்றால், இலக்கணத்தைப் பற்றிக் கூறுவான் ஏன்? பள்ளி யிறுதிவகுப்புத் தேறியவராயினும், பட்டக் கல்வியில் பொதுத் தமிழ் படித்தவராயினும், ஆசிரியர் உதவியின்றி ஒருவர், எத்தகைய கூரிய மதியுடையராயிருந்தாலும், தமிழ் இலக்கணத்தை நன்முறையில் கற்றுத் தேர்ச்சி பெறுதல் அரிதினும் அரிதே. நன்னூலையாவது ஆசிரியரிடம் கற்றவரே, தம் நுண்மாண் நுழைபுலத்தால் பின்னர் முயற்சி செய்து பிறஇலக்கணங்களைக் கற்க முடியும். ஆழ்வார்களும் நாயன்மார்களும் அரிதின் முயன்று பயின்றவர்களே. கம்பரும் சேக்கிழாரும் கடும் முயற்சி செய்து மொழித் தேர்ச்சி கைவரப் பெற்றுக் காவியம் பாடியவர்களே. காளியின் கருணையாலோ தில்லைக் கூத்தன் சொல்லெடுத்துக் கொடுத்ததாலோ பாடியவர்கள் அல்லர். கருவிலே அமைந்த திரு கைகொடுத்து அவர்கள் கவிதைத் திறனைப் பெருகச் செய்தது. திருவருட்பிரகாச வள்ளலாரும் தொல்காப்பியம், யாப்பருங்கலக் காரிகை முதலான கருவி நூல்களையும், நால்வர் பாடிய அருட்பாக்களையும், பிற நூல்களையும் கற்றறிந்தே, ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடினார் என்பதை அவருடைய பாடல்களிலிருந்தும், அவர் இயற்றிய ஆறாந்திருமுறையிலுள்ள உரைநடைப் பகுதியினின்றும் தெரிந்து கொள்ளலாம். ஆதலால், தமிழ் மொழியில் தேர்ச்சிபெற விரும்புவோரும் இலக்கியங்களைக் கற்க விரும்புவோரும் தனி ஆசிரியரை அடுத்துக் கற்க

வேண்டும். அல்லது தமிழ்க் கல்லூரியிலோ ஆங்கிலக் கல்லூரியிலோ சேர்ந்து கற்கவேண்டும். இது தமிழ்மொழிக்கு மட்டுமன்றி எம்மொழிக்கும் ஏற்றதொன்று. இங்ஙனம் கற்பினும் ஓரளவே தேர்ச்சி பெறுதல் கூடும். இக் கல்விக்குப் பின்பு மேலும் மேலும் கற்றால்தான் ஒருவர் தக்க புலமை பெறக்கூடும். கல்லூரியில் கற்றதனாலே புலமை கரைபுரண்டு ஓடி விடாது; தமிழிலக்கிய இலக்கணங்களில் செவ்வையான தேர்ச்சிபெற விரும்புபவர்களுக்கு என்றறிக.

பலர், வேறு வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டு தங்களுடைய ஓய்வு நேரத்தைத் தமிழ் இலக்கியத்தில் செலுத்தித் தனிமையிலே இனிமை காண விரும்புகின்றனர்; வாணிகத் துறையில் இருப்பவர்கள் மனத்தைப் பண்படுத்த இலக்கியத்தை நாடுகிறார்கள். இவர்கள் ஓரளவு தமிழ்படித்திருக்கிறார்கள்; இன்பத்துக்காகத் தமிழ் இலக்கியம் கற்கவிழைகிறார்கள். இத்தகையோர் இலக்கியம்கற்க ஆவல் கொண்டு "எப்படிக் கற்பது? வழி யாது? எங்களால் தமிழிலக்கிய இன்பத்தை அடைய முடியுமா?" என்று கேட்கின்றனர். பலர் இவ்வாறு என்னைக் கேட்டதுமுண்டு; கேட்கிறதுண்டு. முற்காலத்தைப் போல இவர்கள் இக்காலத்தில் தொல்லைப்பட வேண்டுவதில்லை; அரும்பாடுபட்டுப் படிக்க வேண்டுவதில்லை. எளிய இனிய வழி உண்டு. ஓரளவு தமிழறிவு பெற்றவர்களும் பேரிலக்கியங்களையும் கற்றின்புறலாம். பெரும்பாலும் எல்லா நூல்களுக்கும் உரை உண்டு. உரை இல்லாத இலக்கியங்களே தமிழில் இன்று இல்லை எனலாம். உரையைப் படித்துப் புரிந்துகொள்ளும் தேர்ச்சி மட்டும் வேண்டும். சந்திபிரிக்கக் கூடிய அளவு இலக்கண அறிவு இன்றியமையாதது. ஏதாவது உரையுள்ள ஓரிரண்டு அந்தாதியை முதலில் உரையின் உதவி கொண்டு சிறிது முயன்று முயன்று படித்துவிட்டால், சந்தி பிரிக்கும் அறிவு எளிதாக வந்துவிடும். ஆனால், கற்பவர்களுக்கு உண்மையான தமிழ்ப் பற்றும் தமிழ் வெறியும் விடாமுயற்சியும் பொறுமையும் வேண்டும். சிலர் போலித் தமிழ்ப்பற்றுக் கொண்டு சிறிது படித்துப் பின்பு முயற்சி குன்றி, அயர்ச்சியுற்றுப் படிப்பதைக் கைவிட்டுத் தமிழிலக்கியத்தைக் குறைகூறத் தொடங்குகின்றனர். இத்தகைய போலிப் பற்றுடைய மாணவர்களும் பிறரும் ஒருநாளும் தமிழிலக்கியம்

கற்றல் முடியாது; முடியாது. ஒரு சிலர், அழகாகப் பேசக் கற்றுக் கொள்ளுகின்றனர்; தமிழிலக்கியம் படிக்க விரும்புகின்றிலர். தமிழிலக்கியம் படிக்காதவர்கள் தலைசிறந்த தமிழ்ப் பேச்சாளர்களாதல் முயற்கொம்பே. உண்மையான தமிழ்ப் பற்றுக்கொண்டு முயற்சி செய்து எளிய முறையைப் பின்பற்றிப் படித்தால் தமிழிலக்கியம் கற்று இன்புற முடியும்; அறிவும் பெற முடியும்.

தமிழ் மொழியில் அறிவு இலக்கியமும் (Literature of knowledge) உண்டு; ஆற்றல் இலக்கியமும் (Literature of power) உண்டு; அறிஞர்கள் கற்று மகிழத்தக்க இலக்கியமும் உண்டு; பாமர மக்கள் சுவைக்கக் கூடிய எளிய இனிய இலக்கியமும் உண்டு; கலைச் சுவை மிக்க காப்பியங்களும் உண்டு; நகைச் சுவை பளிக்கும் நல்ல தனிப்பாடல் நூல்களும உண்டு; சக்தி யளிக்கும் பக்திப்பாடல் நூல்களும உண்டு; நாட்டுப் பற்றை ஊட்டும் தேசிய கீதங்களும் ஒரு சில உண்டு; இதிகாசக் கதை காப்பியங்களும் உண்டு. உரை நடை இலக்கியங்கள் இப்பொழுதுதான் வளர்ந்து வரத் தொடங்குகின்றன. சிறு கதை நூல்கள் மிகமிக உண்டு. நாடக நூல்களும் ஒரு சில உண்டு. இத்துறை வளர்ச்சிபெற வேண்டுவது.

இலக்கியம் என்று கூறும்பொழுது செய்யுள் நூல்களும் நாடகங்களும் சிறுகதைகளும் நெடுங் கதைகளும் (Novels) உரைநடை நூல்களும் அடங்கும். இது மேலைநாட்டு முறை. நம் நாட்டில் இலக்கியமாக மதிக்கத்தக்க முறையில் உரைநடை நூல்கள் செம்மையாகப் பெருகாத காரணத்தால், அவற்றை இலக்கியமாகக் கருதாத நிலை ஏற்பட்டது. இன்றைக்கு அந்நிலையில் ஒரு சிறு மாற்றம் உண்டாகியிருக்கிறது. நல்ல உரைநடை இலக்கியங்களும் ஒருசில வந்துள்ளன. திரு. வி. க. வின் அழகு நடை மலிந்த உரைநடை நூல்களை இலக்கியம் என்றே கருத வேண்டும்.

(தொடரும்)

# மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

## மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகள்

செந்தமிழ் அன்பர்களே!

மதுரைத் தமிழ்ச்சங்கம் கடந்த ஐம்பத்து மூன்று ஆண்டுகளாகச் செந்தமிழ் வளர்க்கும் திருத்தொண்டில் ஈடுபட்டு மாணவர்களிடம் தமிழ் அறிவைப் பெருக்கவும் ஊக்கம் உண்டாக்கவும் பல தேர்வுகளை நடத்திக்கொண்டு வருவதைத் தமிழ் உலகம் நன்கறியும். தமிழ்ச் சங்கப் பொன் விழா நடைபெற்றபின் இத்தேர்வுகளை இன்னும் சிறந்த முறையில் விரிவாக்கச் சங்கச் செயற்குழு முடிவு செய்துள்ளது. அம் முடிவிற்கேற்பக் கீழ் வரும் தேர்வுகள் சென்னை அரசியலார் தமிழ்த்தேர்வையும், பல்கலைக் கழகத் தமிழ்த் தேர்வையும் பின்பற்றிச் சங்கத் தமிழ்த் தேர்வுகள் ஆங்காங்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுளது. பள்ளித் தலைவர்களும், கல்லூரி முதல்வர்களும் தமிழ்ப் பேராசிரியர்களும் இச் சங்க நன்முயற்சிக்கு ஆக்கமளிக்குமாறு வேண்டுகின்றேன்.

| பள்ளி இறுதித் தேர்வு / வினாத்தாள் | நேரம் | | மதிப்பெண் |
|---|---|---|---|
| I பள்ளியிறுதிவகுப்புத்தேர்வு: | | | |
| 1 பொதுத் தமிழ் முதற்றாள் (I Part I Paper) | காலை | | |
| (செய்யுள்-உரை நடை-இலக்கணம்) | 9—11-30 | .... | 60 |
| பொதுத் தமிழ் இரண்டாந்தாள் (I Part II Paper) | நண்பகல் | | |
| (துணைப்பாடம்-மொழி பெயர்ப்பு) | 11-45—1-15 | ... | 40 |
| 2 சிறப்புத் தமிழ் (II Part) | மாலை | | |
| (செய்யுள்-உரை நடை-இலக்கணம்- | | | |
| பொருளுணர் பயிற்சி-பொதுக்கட்டுரை) | 2-15—4-15 | .... | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| **II கல்லூரி—முன்னிலை வகுப்பு (Pre-University Class)** | | | | |
| முதற்றாள்—(I Paper) இலக்கியமும் இலக்கணமும் | காலை | 10—1 | ... | 100 |
| இரண்டாம்தாள் (II Paper) கட்டுரைகளும் மொழிபெயர்ப்பும் | மாலை | 2—5 | ... | 100 |
| **III கல்லூரி—இடைநிலை வகுப்பு (Intermediate)** | | | | |
| முதற்றாள் (I Paper) இலக்கியமும் இலக்கணமும் | காலை | 10—1 | ... | 100 |
| இரண்டாம்தாள் (II Paper) கட்டுரைகளும் மொழிபெயர்ப்பும் | மாலை | 2—5 | ... | 100 |
| **IV கல்லூரி—இளங்கலை வகுப்பு (B. A.)** | | | | |
| முதற்றாள் (I Paper) இலக்கியமும் இலக்கணமும் | காலை | 10—1 | ... | 100 |
| இரண்டாம்தாள் (II Paper) கட்டுரைகளும் மொழிபெயர்ப்பும் | மாலை | 2—5 | ... | 100 |

## தேர்வு நடக்கும் நாள் 16—2—1957 (சனிக்கிழமை)



### கட்டணம்

கல்லூரி முன்னிலைவகுப்பு ரூ 1—8—0. கல்லூரி இடைநிலைவகுப்பு ரூ 1—8—0. கல்லூரி இளங்கலைவகுப்பு ரூ 2—0—0, பள்ளியிறுதிவகுப்புத் தேர்வு பொதுத்தமிழ் மட்டும் ரூ 1. பள்ளியிறுதி பொதுத்தமிழ்-சிறப்புத்தமிழ் இரண்டும் ரூ 1-8-0.

கட்டணத்தை 10—1—57க்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பவேண்டும். பலர் சேர்ந்து மொத்தமாகவும் அனுப்பலாம். விண்ணப்பத்தில் தங்கள் கல்லூரித் தலைவர் அல்லது பள்ளித் தலைவர் அல்லது தமிழாசிரியர் கைபெழுத்து இருத்தல் வேண்டும். இது தொடர்பான ஐயங்களைக் கீழ்வரும் முகவரிக்கே எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மேலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை.

## பரிசு

| எண் | வகுப்பு | 1-வது பரிசு ரூ. | 2-வது பரிசு ரூ. | 3-வது பரிசு ரூ. | 4-வது பரிசு ரூ. | 5-வது பரிசு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பள்ளியிறுதி வகுப்பு (S. S. L. C.) | 30 பெறத்தக்க வெள்ளிப்பதக்கம் | 25 | 20 | 15 | 10 |
| 2 | முன்னிலை வகுப்பு (P, U. CLASS.) | 40 பெறத்தக்க தங்கப் பதக்கம் | 35 | 30 | 25 | 20 |
| 3 | இடைக்கலை வகுப்பு (Inter.) | 40 பெறத்தக்க தங்கப்பதக்கம் | 35 | 30 | 25 | 25 |
| 4 | இளங்கலை வகுப்பு (B. A.) | 50 பெறத்தக்க தங்கப் பதக்கம் | 45 | 49 | 35 | 39 |

தேர்வில் வெற்றி பெறும் அனைவர்க்கும் சங்கச் சான்றிதழ் வழங்கப் பெறும்.

முதல் வகுப்பு—60%. இரண்டாம் வகுப்பு—50%. மூன்றும் வகுப்பு—40%.

மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை.
11—11—56.

பி. டி. இராசன், எம். எல். ஏ.
துணைத் தலைவர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

# மதுரைத் தமிழ்ச் சங்கத் தனித்தமிழ்த் தேர்வுகள்.

## அறிவிப்பு

செந்தமிழ் அன்பர்களே !

மதுரைத் தமிழ்ச் சங்கம் கடந்த ஐம்பத்து மூன்று ஆண்டுகளாகச் செந்தமிழ் வளர்க்கும் திருத்தொண்டில் ஈடுபட்டு மாணவர்களிடம் தமிழறிவைப் பெருக்கவும், தமிழார்வம் ஊட்டவும் பல தேர்வுகளை நடத்திக்கொண்டு வருவதைத் தமிழுலகம் நன்கறியும். பல்லாண்டுகளாக மதுரைத் தமிழ்ச் சங்கம் தனித் தமிழ்த் தேர்வுகளை நடத்திவருகின்றது. இத் தனித் தமிழ்த் தேர்வுகளில் தேர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். தமிழ்ச் சங்கப் பொன்விழா நடைபெற்றபின் இத் தனித் தமிழ்த் தேர்வுகளைச் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு முறையில் சிறந்த நிலையில் விரிவாக நடத்தச் சங்கச் செயற்குழு முடிவு செய்துள்ளது. அம்முடிவிற் கேற்பக் கீழ்வருந் தேர்வுகள் சிறந்த முறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டுக்கு மட்டும் பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் ஆகிய தேர்வுகள் வழக்கம்போல நடைபெறும். முந்திய பாட நூல்களே இவ்வாண்டுத் தேர்வுகளுக்கு உண்டு. ஒவ்வொரு தேர்வுக்கும் எவ்வேழு வினாத்தாள்கள் முன்போலவே இருக்கும்.

பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் ஆகியவை கீழ்க்காணும் நாட்களில் நடைபெறும்.

| எண் | வினுத்தாள் | தேர்வு நடக்கும் நாள் | நேரம் | மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1 | இலக்கணம் I | 3—4—1957 | காலே 10—1 மணி | 60 |
| 2 | செய்யுள் இயற்றல் | ,, | மாலே 2-30—4-30 மணி | 60 |
| 3 | இலக்கணம் II | 4—4—1957 | காலே 10—1½ மணி | 60 |
| 4 | வசனமும் தருக்கமும் | ,, | மாலே 2-30—4-30 மணி | 60 |
| 5 | இலக்கியம் I | 5—4—1957 | காலே 10—1 மணி | 90 |
| 6 | கட்டுரை எழுதுதல் | ,, | மாலே 2-30—4-30 மணி | 90 |
| 7 | இலக்கியம் II | 6—4—1957 | காலே 10—1 மணி | 90 |

தேர்வுக்குழு 15—6—1957-இல் முடிவுகளைத் தமிழ் நாளிதழ்களில் வெளியிடும். இவ்வாண்டு நுழைவுத் தேர்வு 1957-ஆம் ஆண்டு மார்ச்சுமீ 13௳ நடைபெறும்.

## பரிசுகளின் விவரம்

| எண் | தேர்வு | முதற்பரிசு | இரண்டாம்பரிசு | மூன்றாம்பரிசு |
|---|---|---|---|---|
| 1 | பிரவேசம் | 50 ரூ. பெறத்தக்க தங்கப்பதக்கம் | 30 ரூ. | 20 ரூ. |
| 2 | பாலபண்டிதம் | 70 ரூ. பெறத்தக்க தங்கப்பதக்கம் | 50 ரூ. | 30 ரூ. |
| 3 | பண்டிதம் | 100 ரூ. பெறத்தக்க தங்கத் தோடா | 70 ரூ. பெறத்தக்க தங்கப் பதக்கம். | 50 ரூ. |

## தேர்வுக் கட்டணம்.

பிரவேசம் ... 1—0—0 பாலபண்டிதம் ... 2—0—0 பண்டிதம் ... 3—0—0

கட்டணத்தை 31—1—1957-க்குள் மதுரைத் தமிழ்ச்சங்க அலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் மணியார்டர் வழியாக அனுப்புதல் வேண்டும்.

விவரங்களுக்கு : 'மேலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், தமிழ்ச் சங்கம் தெரு, மதுரை' என்னும் முகவரிக்கு எழுதவும்.

குறிப்பு:— தேர்வு நடக்கும் இடத்தில் பெண்களுக்கு வேண்டும் வசதிகள் தனித்தே செய்து கொடுக்கப்படும்.

அடுத்த ஆண்டு முதல் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வின் பெயர்களும் பாட நூல்களும் மாறும். அந்த அந்தத் தேர்வுகளுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் குறிப்பிடும் பாட நூல்களோடு சங்கத்தாரால் வைக்கப்படும் ஒன்றிரண்டு நூல்கள் சேர்க்கப்படும்.

தமிழ்ச்சங்கம் தெரு;
மதுரை.
1—12—1956

பி. டி. இராசன், எம். எல். ஏ.
துணைத்தலைவர்.
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கணுநால் (5) இனியநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச் சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4–8–0. இதுவரை 51 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ. 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒருரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.